Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 8.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்:03 திருவள்ளுவர் ஆண்டு: 2036 ஆனி- 14 ஆம் நாள் ஹிஜ்ரி 1428 ஜ-அவ்வல் 20 (28.06.2005) செவ்வாய்க்கிழமை இதழ்:272

சிறியதோ,பெரியதோ, எந்த அளவுகளிலான
பொதிகள், கடிதங்களை
எந்த நாட்டிற்கும்
எந்தநேரமும்
துரிதமாகவும் குறைந்த
கட்டணத்தில் அனுப்பிட
FedEx Express
திருமுருகன் கொம் நெற்
259,கே.கே.எஸ் றோட்,
யாழ்ப்பாணம்.
(Opposite All Ceylon Distributors)
Tel - 021 222 7835
Fax - 021 222 7836
46, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி,யாழ்ப்பாணம்
(பலநோக்கு கூ...ச.முன்பாக)
Tel - 021 222 7560
Fax - 021 222 7310

# படையினரை வெளியேறுமாறு கோரி இரு பெரும் ஆர்ப்பாட்டப் பேரணிகள்!

## தீவகம் - ஆயிரக்கணக்கான மக்கள் பங்கேற்பு!



யாழ்ப்பாணம் —

தமது நிலத்தை விட்டு படையினரை உடனடியாக வெளியேறுமாறு கோரி தீவகப் பகுதி மக்கள் ஊர்காவற்றுறை பாலக்காட்டு சந்தியிலிருந்து ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனை வரை மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தினர்.

தீவக மக்கள் அபிவிருத்தி நலன் காப்பகம், தீவகப் பொது அமைப்புக்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் ஊர்காவற்றுறை பாலக்காட்டு சந்தியிலிருந்து நேற்றுக் காலை 10.45 மணியளவில் ஆரம்பமான ஆர்ப்பாட்டப் பேரணியில் சுமார் பத்தாயிரத்துக்கும் அதிகமான மக்கள் பங்கேற்றனர்.

பேரணியில் கலந்துகொண்ட மக்கள் தமிழீழத் தேசியத் தலைவரின் படங்களைக் கைகளில் ஏந்தியவாறு 'எமது நிலம் எமக்கு வேண்டும்', 'எங்கள் தலைவர் பிரபாகரன்', 'எமது வீடு, எமது கடல் எமக்கு வேண்டும்', 'உடனடியாகப் புறப்படு', 'சுனாமி நிவாரணப் பணத்தையெல்லாம் பதுக்காதே', 'நாங்களும் இந்த மண் பிரஜைகள் தான்', 'மீள் குடியேற்றத்தை உடன் செயற்படுத்த வேண்டும்', 'அதிகாரம் மிக்க தன்னாட்சி உரிமை, எமது பாதுகாப்பு, எமது கௌரவம் விடுதலைப் புலிகளின் பலத்தில்', 'எமது பலம் விடுதலைப் புலிகளே',

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தென்மராட்சி - ஏ-9 வீதியை மறித்தும் போராட்டம்!

கொடிகாமம் —

தென்மராட்சி கிழக்கிலுள்ள உயர் பாதுகாப்பு வலயப் பகுதிகளில், மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்து அந்தப் பகுதி மக்கள் நேற்று உசனில் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணியொன்றை நடத்தினர்.



தென்மராட்சி கிழக்குப் பகுதிகளான மிருசுவில், உசன், கரம்பகம், ஒட்டுவெளி, கிளாலி, எழுது மட்டுவாள் வடக்கு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த இடம்பெயர்ந்த மக்கள் நேற்றுக்காலை 10 மணியளவில் உசன் கந்தசுவாமி ஆலய முன்றலில் ஒன்றுகூடினர்.

அங்கு கேதீஸ்வர குருக்கள் தலைமையில் இடம்பெற்ற சமயப் பிரார்த்தனையைத் தொடர்ந்து கண்டனக் கூட்டமும் இடம்பெற்றது. இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.கே.சிவாஜிலிங்கம், என்.ரவிராஜ் ஆகியோரும், இடம்பெயர்ந்தோர் நலன்புரிச் சங்கத்தைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை, ஓய்வு பெற்ற அதிபர் துரைரட்ணம், செல்வி தங்கரட்ணம் மற்றும் தென்மராட்சி பொதுஅமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் ரி.அருந்தவபாலன் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

கண்டனக் கூட்டத்தைத் (12 ஆம் பக்கம் பார்க்க)

# வெலிக்கந்த தாக்குதல்; புலிகள் கடும் கண்டனம்!

## விசாரணை நடத்துமாறு கண்காணிப்புக் குழுவுக்கு கடிதம்

கிளிநொச்சி —


வெலிக்கந்தவில் விடுதலைப் புலிகளின் போராளிகள் பயணம்செய்த வாகனத் தொடரணி மீது தாக்குதல் நடத்தப்பட்டது தொடர்பாக போர் நிறுத்த கண்காணிப்பு குழுவின் தலைவருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன் -

தரைவழிப் பயணத்தின்போது ஏற்றுக்கொள்எப்பட்ட நடைமுறைக்கு முரணாக படையினர்

கவனத்திற்கு கொண்டுவருகிறேன். இந்த தரைவழிப்பயணத்தின்போது, முன்னர் ஏற்றுக்கொள்எப்பட்ட விதிமுறைகளுக்கு முரணான வகையில் இலங்கை இராணுவத்தினர் நடந்து கொண்டவிதம் தொடர்பாக எங்களுடைய கடுமையான அதிருப்தியையும், கண்டனத்தையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறோம்.

இந்த மாத முற்பகுதியில் மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்த மட்டக்களப்பிற்கான எமது போராளி

# பொதுக்கட்டமைப்புக்கு எதிராக ஜே.வி.பி. வழக்குத் தாக்கல்!



கொழும்பு —

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட பொதுக்கட்டமைப்பை - சட்டவிரோதமானதென அறிவிக்குமாறும், இதன் செயற்பாட்டைத் தடுப்பதற்கான தடை உத்தரவை பிறப்பிக்குமாறு கோரி கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் ஜே.வி.பி வழக்குத்தாக்கல் செய்துள்ளது.

ஜே.வி.பியின் மேல்மாகாண சபை உறுப்பினர் வாஸ் குணவர்த்தன கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளார்.

இந்த வழக்கில் நிவாரணம், புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் செயலாளர் எம்.எஸ்.ஜயசிங்க - விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த சண்

# விசாரணை நடத்துமாறு கண்காணிப்புக் குழுவுக்கு கடிதம்

கிளிநொச்சி —

வெலிக்கந்தவில் விடுதலைப் புலிகளின் போராளிகள் பயணம்செய்த வாகனத் தொடரணி மீது தாக்குதல் நடத்தப்பட்டது தொடர்பாக போர் நிறுத்த கண்காணிப்பு குழுவின் தலைவருக்கு அனுப்பியுள்ள கடித்தத்தில் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன் -

தரைவழிப் பயணத்தின்போது ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைக்கு முரணாக படையினர் நடந்துகொண்ட முறை குறித்து கடும் அதிருப்தியையும், கண்டனத்தையும் தெரிவித்துள்ளார்.

போர் நிறுத்தக்கணிகாணிப்புக் குழுத் தலைவருக்கு அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் நேற்று அனுப்பிய கடிதத்தில் மேலும் குறிப்பிட்டிருந்ததாவது -

வெலிக்கந்த பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தை உங்களுடைய கவனத்திற்கு கொண்டுவருகிறேன். இந்த தரைவழிப்பயணத்தின்போது, முன்னர் ஏற்றுக்கொள்ளப்பட்ட விதிமுறைகளுக்கு முரணான வகையில் இலங்கை இராணுவத்தினர் நடந்து கொண்ட விதம் தொடர்பாக எங்களுடைய கடுமையான அதிருப்தியையும், கண்டனத்தையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறோம்.

இந்த மாத முற்பகுதியில் மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்த மட்டக்களப்பிற்கான எமது போராளிகளின் பயணத்தின்போது, இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் - ஏனைய ஆயுதக்குழுக்களுடன் சேர்ந்து அந்தத் தொடரணியை வெலிக்கந்தப் பகுதியில் வைத்து தாக்குவதற்கு திட்டமிட்டிருந்தார்கள் என எமக்கு கிடைத்த புலனாய்வுத் தகவல்களின் பின்னர் இந்தப் பயணம் இடைநிறுத்தப்பட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இவ்வாறாக எமது (12 ஆம் பக்கம் பார்க்க)



அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட பொதுக்கட்டமைப்பை - சட்டவிரோதமானதென அறிவிக்குமாறும், இதன் செயற்பாட்டைத் தடுப்பதற்கான தடை உத்தரவை பிறப்பிக்குமாறு கோரி கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் ஜே.வி.பி வழக்குத்தாக்கல் செய்துள்ளது.

ஜே.வி.பியின் மேல்மாகாண சபை உறுப்பினர் வாஸ் குணவர்த்தன கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளார்.

இந்த வழக்கில் நிவாரணம், புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் செயலாளர் எம்.எஸ்.ஜயசிங்க - விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த சண்முகலிங்கம் றஞ்சன், ஜனாதிபதி செயலாளர், நீதியமைச்சின் செயலாளர் ,சட்டமா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப் பட்டுள்ளனர்.

குறித்த உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு புனரமைப்பு அமைச்சின் செயலாளர் ஜயசிங்கவிற்கு சட்டரீதியாக எந்தவொரு அதிகாரமும் இல்லை. ஆகையால், அவர் இதில் (12 ஆம் பக்கம் பார்க்க)

# யுத்தநிறுத்த உடன்பாட்டை வலுப்படுத்த வேண்டும்!

## அமெரிக்கா கோரிக்கை

கொழும்பு —

பொதுக்கட்டமைப்பில் கைச்சாத்திட்டுள்ள இலங்கை அரசாங்கமும்- தமிழீழ விடுதலைப் புலிகளும் இதன்மூலம் நம்பகத்தன்மையை ஏற்படுத்துவதுடன், முடங்கிப் போயுள்ள சமாதானப் பேச்சுக்களுக்கு உயிர்கொடுக்க வேண்டும் என்று அமெரிக்கா கோரிக்கை விடுத்துள்ளது.

கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதகரகம் நேற்றுவெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு கோரிக்கை விடுக்கப்பட்டது.

அந்த அறிக்கையில் மேலும் -

பொதுக்கட்டமைப்பு முறையாக செயற்படுத்தப்பட்டால் சுனாமியால் பாதிக்கப்பட்ட அனைத்துத் தரப்பு மக்களுக்கும் நிவாரண உதவிகள் சமநிலையில் சென்றடையும்.

இந்தப் பொதுக்கட்டமைப்பானது இருதரப்பினரிடையே நம்பிக்கை ஏற்படுத்துவதோடு முடங்கி நிற்கும் அமைதிப் பேச்சுக்களை முன்னெடுத்துச் செல்லவும் உதவும்.

இந்த நிலையில் மிகவும் முக்கியமானது - இருதரப்பினரும் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை வலுப்படுத்த வேண்டியது மிகவும் அவசியமாகும் என்று அதில் கூறப்பட்டுள்ளது.

## சுனாமி புனரமைப்புக்கான

# அரச உயர் மட்டக்குழு வடமராட்சிக்கு விஜயம்!

கொழும்பு —

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி வழங்கும் சுனாமி நிவாரண சபை, பொதுக்கட்டமைப்பின் செயலாளர் நாயகம் தலைமையிலான குழுவொன்று நேற்று வடமராட்சிப் பிரதேசத்தில் சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்குச் சென்று பார்வையிட்டது.

நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமியின் வழிகாட்டலில் இந்தக் குழு வடமராட்சிப் பிரதேசத்தின் சுனாமி அனர்த்தத்தால் பாதிப்படைந்த தும்பளை கிழக்கு, கற்கோவளம் பகுதியிலுள்ள தற்காலிக வீடமைப்புத் திட்டங்கள் மற்றும் தற்காலிக குடியிருப்புக்களைப் பார்வையிட்டு, அங்கு தங்கியுள்ள மக்களுடன் கலந்துரையாடி அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளையும் நேரடியாகக் கேட்டுத் தெரிந்துகொண்டனர்.

அதன் பின்னர் சுனாமி அனர்த்தத்தால் வடமராட்சிப் பிரதேசத்தில் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட மணற்காட்டுப் பிரதேசத்துக்குச் சென்று, அங்கு வீடுகளை இழந்து தற்காலிக வீடுகளில் தங்கியுள்ள மக்களுக்குரிய (12 ஆம் பக்கம் பார்க்க)

# திருமலை இணைப்பதிகாரியாக றியர் அட்மிரல் வசந்த கரன்னகொட!

திருகோணமலை —

கிழக்குப் பிராந்திய கடற்படைத் தளபதியாக ஜனாதிபதி சந்திரிகாவால் நியமிக்கப்பட்டிருக்கும் றியர் அட்மிரல் வசந்த கரன்னகொடவுக்கு திருகோணமலை பாதுகாப்பு இணைப்பதிகாரி என்ற புதிய பொறுப்பும் வழங்கப்பட்டுள்ளது.

கிழக்குப் பிராந்திய கடற்படைத் தளபதியாக இருந்த றியர் அட்மிரீல் சரத் வீரசேகர, அந்தப் பொறுப்பிலிருந்து ஜனாதிபதியால் திடீரென நீக்கப்பட்ட பின்னர் - அவரது இடத்துக்கு தற்போது வடமத்திய மாகாண கடற்படைத் தளபதியாக உள்ள றியர் அட்மிரல் வசந்த கரன்னகொட நியமிக்கப்பட்டார்.

இவருக்கு மேலதிகமாக திருகோணமலை பாதுகாப்பு இணைப்பதிகாரி பொறுப்பும் வழங்கப்பட்டிருக்கிறது. திருகோணமலை மாவட்டத்திலுள்ள முப்படைகளுடன், பொலிஸ் பிரிவும், றியர் அட்மிரல் வசந்த கரன்னகொடவின் கட் டளையின் கீழ் வரும்.

திருமலையில் சர்ச்சைக்குரிய வகையில் அமைக்கப்பட்டுள்ள புத்தர்சிலை தொடர்பாக ஏற்பட்டுள்ள வன்செயல்களுடன் நேரடியாக சம்பந் தப்பட்டுள்ள ஓட்டோ சாரதிகளுக்கான கூட்டம் ஒன்றில், கிழக்குப் பிராந்திய கடற்படைத் தளபதி றியர் அட்மிரல் வீரசேகர உரையாற்றியதாக புலனாய்வுத் தகவல்கள் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டன.

இதையடுத்து அவரை உடனடியாக கிழக்கு கடற்படைத் தளபதி பொறுப்பிலிருந்து இடமாற்றுமாறு கூட்டுப் (12 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழீழத்திற்கான இறுதிக் கட்டப் போருக்கு தேசியத் தலைவர் ஆணையிட வேண்டும்!

## தீவகப் பொது அமைப்புக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம்

தென்னிலங்கையில் அரசியல் வங்குரோத்து நிலையடைந்து பௌத்த, சிங்கள பேரினவாத போக்கு மேலாதிக்கம் பெற்று வருவதால் அங்கிருந்துவரும் சமாதான சமிக்கைகள் தமிழ் மக்களுக்கு எந்த விதத் தீர்வையும் ஏற்படுத்தப் போவதில்லை. எனவே பொறுத்தது போதும் பொங்கியெழுந்து தமிழீழத்தை பிரகடனப்படுத்தும் இறுதிப்போருக்கு ஆணையிடுமாறு தமிழீழ தேசியத் தலைவரிடம் தீவகப் பொது அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

நேற்று தீவகத்தில் நடைபெற்ற கண்டனப் பேரணியின் பின்னர் தீவகப் பொது அமைப்புக்களின் ஒன்றியப் பிரதிநிதிகளும், தீவக மக்கள் அபிவிருத்தி நலன் சங்கத்தின் பிரதிநிதிகளும் இணைந்து கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவனேசன் ஊடாக தேசியத் தலைவருக்கு அனுப்பிவைத்த மகஜரிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஐம்பது ஆண்டுகளாக தென்னிலங்கையில் சிறந்த அரசியல் தலைமைத்துவம் இருந்திருக்கவில்லை. எதிர்காலத்திலும் அவ்வாறான சிறந்த தலைமைத்துவம் தோற்றம்பெறப்போவதுமில்லை என்பது எமது பட்டறிவின் மூலம் வெளிப்படுகிறது.

பௌத்த சிங்களப் பேரினவாதக் குரூரத்தினால் எமது நிலம் ஆக்கிரமிக்கப்பட்டு எமது உறவுகளின் உயிர்கள் காவுகொள்ளப்பட்டு இராணுவத் தாக்குதலுக்கு ஆளாகி, உடமைகள் நாசமாக்கப்பட்டு, ஏதிலிகளாக்கப்பட்ட எமது மக்களுக்கு விடுதலை வாழ்வு தேவையாக இருக்கின்றது. இனியும் துயரங்களைச் சுமந்து செல்ல விரும்பவில்லை. எனவேதான் இறுதிப் போருக்கு தயாராவதைத் தவிர வேறு வழியில்லை என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

தங்களது தலமையின் கீழ் விடுதலைப் புலிகளின் படைக்கட்டமைப்பு அதியுயர் பலம் பெற்றுள்ளது. இதனால்தான் சிங்களம் அடிபணிந்து போர் நிறுத்தம், புரிந்துணர்வு உடன்படிக்கைகளை மேற்கொண்டது. ஒப்பந்தங்களைக் கிழித்தெறியும் மரபில் வந்த ஆளும் வர்க்கம் விடுதலைப்புலிகளிடம் செய்து கொண்ட ஒப்பந்தத்தை கிழிக்க முடியாமல் அடங்கிக் கிடக்கிறது.

சிங்கள, தமிழ் தேசியத்தை உணர்ந்துகொண்டு அண்மைக் காலமாக சமாதானச் சூழலைப் பயன்படுத்தி இந்த நாட்டில் புரையோடிப் போயிருக்கும் இனப் பிணக்கை முடிவுக்குக் கொண்டு வந்திருக்கத் தவறிவிட்டது. எனவே நாம் எமது வழியில் செல்வோம். அது சிறந்த வழி.

ஐக்கிய நாடுகள் சபையின் விதிப்படி சுயநிர்ணய அடிப்படையில் தமிழர்கள்பிரிந்துசென்று தமக்கென தனிநாட்டை அமைத்துக் கொள்வார்கள். அதுவே தமிழர்களின் சுதந்திரம், பாதுகாப்பு, கௌரவம், அமைதியான வாழ்வுக்கு நிரந்தரமான தீர்வாக அமையும்.

பௌத்த சிங்கள பேரினவாதத் தலைமைகள் சிங்கள மக்களை ஏமாற்றி இனவாதக் கருத்துக்களை விதைத்து இனமுரண்பாட்டைத் தோற்றுவித்து தங்களது தலைமை, அதிகாரத்தை தக்க வைத்துக்கொள்ள முயற்சிக்கின்றன. தங்கள் பதவியை, ஆட்சியைத் தக்க வைக்கவே சமாதான பேச்சுவார்த்தை தீர்வு என நாடகமாடுகிறது. இதனையும் இனியும் நம்பவேண்டாம். இவ்வாறான செயல்களால் தமிழ் மக்கள் விடுதலைக்காக அதிக நாள் காத்திருக்க வேண்டியிருக்கிறது.

எனவேதான் இறுதிப் போருக்கு ஆணையிடுங்களெனக் கோருகின்றோம். தீவகத்தில் கடந்த பதினைந்து ஆண்டுகளாக சிங்களப்படை நிலைகொண்டுள்ளது. சிங்கள ஆக்கிமிப்பாளர்கள் இருக்கும்வரை நாங்கள் நிம்மதியாக இருக்கமுடியாது. எமது மக்களின் வாழ்விடங்களை விட்டு சிங்களப்படை முற்றாக வெளியேற்றப்பட வேண்டும். தமிழ் மக்கள் உங்கள் பின்னால் அணிவகுத்து நிற்கிறார்கள். தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டம் வெல்லும் வரை ஓயமாட்டார்கள்.

பௌத்த, சிங்கள பேரினவாதிகளின் மேலாதிக்கத்தை அடக்கி, ஆக்கிரமிப்புப் படைகளை வெளியேற்றி, இழந்த எமது நாட்டை விடுதலை பெறச் செய்ய தீர்மானமாக முடிவெடுக்கும் காலம் நெருங்கிவிட்டது. எமது மக்கள் தங்கள் ஆணைக்குக் காத்திருக்கிறார்கள் என்பதை மிகவும் பணிவோடு தங்களுக்குத் தெரிவிக்க விரும்புகின்றோம் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


## சிறு விளம்பரம்

### தவறவிடப்பட்டுள்ளது

சங்கானைச் சந்தியிலிருந்து சங்குவேலியூடாக சுன்னாகம் இலங்கை வங்கிக்கு இடையில் மோட்டார் வண்டியில் சென்ற போது சிறிய சிவப்பு - பச்சை நிற பை பெறுமதிமிக்க பொருட்களுடன் தவறவிடப்பட்டுவிட்டது. அதைக் கண்டெடுத்தவர்கள் கீழ்க் காணும் முகவரியில் தொடர்பு கொள்ளவும். எடுத்துத் தருபவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும். கார்த்திகா, 9/1 ஐயனார் கோயில் வீதி, யாழ்ப்பாணம். தொ.பேசி:-077 3155624 (1960)

### ஸ்ரீ மலையாள பகவதி ஜோதிடாலயம்

**Pandit Nara Semanaidu**
**World Expert Astrologer**

இந்தியாவின் கர்நாடகாவிலிருந்து வந்திருக்கும் சர்வதேச ஜோதிடர் பண்டிதர் நரசிம்ம நாயுடு அவர்கள் ஓம் சிவசக்தி அருள்கொண்டு கைரேகை, பிறந்த திகதி மூலம் துல்லியமாக நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப்போகிறவை, தொழில் வியாபார இலட்சுமிகர விடயங்கள், விவாக, வாகனப் பொருத்தங்கள், கல்வி, குடும்ப ஒற்றுமைகள் மற்றும் எதிர்கால பலாபலன்களை அறிந்துகொள்ள தொடர்புகளுக்கு: ஹோட்டல் பிள்ளையார் இன், அறை இல.09 - 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். T.P - 0779122836 நேரம்: காலை 9.00 - 8.30 வரை (1198)

### நாகம்ஸ் சுன்னாகம்



விக்ராந், லக்ஷ்மிராய் வடிவேலு நடித்த
கற்க்க கசடற
காட்சிகள்:- 11.00, 3.00, 6.00 (பழைய நேரம்)

### மனோகரா யாழ்ப்பாணம்

அதிரடி வெளியீடு! சியான் விக்ரம், சதா, விவேக், பிரகாஷ்ராஜ், கவுண்டமணி, சார்லி ஆகியோரின் சிறந்த நடிப்பில்
அந்நியன்
anniyan



இசை:- ஹரிஸ் ஜெயராஜ்
இயக்கம்:-சங்கர்
விசேட காட்சிகளும் உண்டு
காட்சி நேரம் : (பு.நே) 10.30, 2.30, 6.30, 9.30

### ராஜா யாழ்ப்பாணம்

ரஜினிகாந், பிரபு, ஜோதிகா, நயன்தாரா, வடிவேல் நடித்த
சந்திரமுகி



பு.நே: 10.30, 2.30, 6.30, 9.30

### நாதன்ஸ் யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)

வெள்ளித்திரையில்
பத்மஸ்ரீ பாடகர் ஹரிஹரன்
அறிமுகம்
குஷ்பு, ரியாஸ்கான் நடித்த்
பவர் OF WOMEN
காட்சிகள் : 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

### நிறைஞ்சனாஸ் சங்கானை

சரத்குமார் – நயன்தாரா
நடித்த
ஐயா
பஸ் போக்குவரத்துபாதை
இல 782 – காரைநகர் / 787 மாதகல்
காட்சிகள் : 11.00, 2.45, 6.00 (பு.நே)

## இந்தியாவில் உயர்கல்வி வாய்ப்பு

**Muthayamal Educational Institutions**

RASIPURAM - 637 408, NAMAKKAL - (DT) TAMILNADU. www.muthayammal.com



இந்தியாவில் பிரபல்யமான முத்தயம்மாள் கல்வி நிறுவனமானது ANNA (Engineering) University - PERIYA UNIVERSITY ஆகியவற்றின் பட்டதாரி (Degree Courses) நெறிகளை வழங்கி வருகிறது. இலங்கையில் A/L சித்தியடைந்த மாணவர்கள் இக்கல்லூரியில் பின்வரும் நெறிகளில் சேர்ந்து உலகளாவிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பட்டதாரியாக வாய்ப்பு.

| பாடநெறி | காலாண்டுகள் | உட்பிரவேச தகைமைகள் |
|---|---|---|
| B.E. Computer Science & Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.E. Electronics & Communication Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.E. Electrical & Electronics Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.E. Electronics & Instrumentation Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.E. Mechanical Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.Tech Information Technology | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.Sc. Computer Technology | 3 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.Sc. Information Technology | 3 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| | | |
| [illegible]iochemistry | 3 Years | A/L Passes in Physics, Chemistry, Biology |
| B.Sc. Microbiology | 3 Years | A/L Passes in Physics, Chemistry, Biology |
| B.Sc. Biotechnology | 3 Years | A/L Passes in Physics, Chemistry, Biology |
| B.Sc. Bio-Informatics | 3 Years | A/L Passes in Physics, Chemistry, Maths |
| B.Sc. Maths | 3 Years | A/L Passes in Maths, Chemistry, Physics |
| B.Sc. Physics | 3 Years | A/L Passes in Maths, Physics |
| B.Sc. Electronics | 3 Years | A/L Passes in Physics, Chemistry, Maths |
| B.Sc. Chemistry | 3 Years | A/L Passes in Physics, Chemistry |
| B.Sc. Computer Science | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| Bachelor of Computer Applications (B.C.A) | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| B.Com (CA) | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| Bachelor of Business Administration (B.B.A) | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| B.Com | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| B.C.S | 3 Years | Pass in All Subjects in any Discipline |

O/L மட்டும் சித்தியடைந்த மாணவர்கள் Kaveri Polytechnical College இல் சேர்ந்து 3 வருட Diplomaவைப் பூர்த்தி செய்து, மேலும் 3 ஆண்டுகளில் Engineer ஆக வாய்ப்பு.

A/L 2005 மாணவர்கள் Pending Results முறையில் ஜூலை மாதத்திலே கல்லூரியில் சேர்ந்து பாடநெறியைத் தொடங்க வாய்ப்பு

**Call : 0777 767818 / 011-4512591** for prospectus and application forms

SCHOLARS INFORMATION CENTER
2nd floor, Colombo Plaza, 50, Galle Road, Colombo-06. e.mail : peter@scholars-info.com


## நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

நடாத்தும் 2005 ஆம் ஆண்டு தரம் ஐந்திற்கான புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக்கென இலங்கையிலுள்ள முன்னணி ஆசிரியர்கள் இணைந்து வழங்கும்

# முன்னோடிக் கருத்தரங்கு

**விபரம் விரைவில் நமது ஈழநாடு நாளிதழில் வெளிவரும்**

### யாழ்.மாவட்டத்துக்கான அனுசரணை வழங்குவோர்

கொமர்ஷல் வங்கி
உங்கள் நலமே எங்கள் நோக்கம்



செலிங்கோ லைஃப்
சுன்னாகக் கிளை

DSI
சுப்ப சூஸ்
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

ஸ்ரீமுருகன் தொலைத்தொடர்பு நிலையம்

BOC
ரண் கெகுழு
சிறுவர் சேமிப்புக் கணக்கை
மண்டபத்தில் ஆரம்பிக்கலாம்

யாழ்.மாவட்டத்திலுள்ள மாணவர்கள் கீழுள்ள கூப்பன்களை நிரப்பி உடனடியாக "சந்தைப்படுத்தல் பிரிவு, நமது ஈழநாடு, 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்." எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

### கிளிநொச்சி மாவட்டத்துக்கான அனுசரணை

குமரகுரு புடவை அழகுப்பொருள் வாணிபம்
யாழ் சாலை,
கிளிநொச்சி.
Tel : 021 – 228 5971

போட்டோ பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது
இங்கே வெட்டவும்

## விண்ணப்பப் படிவம்

பெயர் :- ........................................

தற்போதைய முகவரி:- ........................................

பெற்றோர்/பாதுகாவலர் பெயர் :- ........................................


மாவட்டம் :- ........................................

| அலுவலக பாவனைக்கு | |
|---|---|
| இலக்கம் | |
| மாவட்டம் | |

........................................ ........................

பெற்றோர்/பாதுகாவலர்/ஆசிரியர்கையொப்பம் மாணவர் கையொப்பம்

# சந்திரிகா — மங்கள இடையே முறுகல் நிலை முற்றுகிறது!




கொழும்பு—

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும் - சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கிய பிரமுகரும் அமைச்சருமான மங்கள சமரவீரவுக்கும் இடையிலான முறுகல் முற்றிவருவதாகத் தெரியவருகிறது.

கடந்தவாரம் பொதுக்கட்டமைப்பில் கைச்சாத்திட்டபோது அமைச்சர்களான சரத் அமுனுகமவுக்கும், மங்கள சமரவீரவுக்கும் இடையில் கடுமையான வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது.

அரசை சீர்குலைத்ததுடன், தெருவில் நடமாடமுடியாதபடியான சூழ்நிலையை உருவாக்கிவிட்டீர்கள் என்று சரத் அமுனுகமவிடம் மங்கள கோபமாகக் கூறியதுடன், மேலும், சில கடுமையான சொற்பிரயோகங்களையும் அவர் பயன்படுத்தியுள்ளார். அமைச்சர் சரத் அமுனுகமவும், உங்கள் சொந்த நலனுக்காக ஜே.வி.பியுடன் கைகோர்த்துக்கொண்டு நாட்டு நலனைக் கைவிட்டு விட்டீர்கள் என்று பதில் கொடுத்திருந்தார்.

இதையடுத்து பிரதி மின்சாரத் துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத் கமகேயுடனும் மங்கள சமரவீர மோதியுள்ளார். ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு வாக்களித்த மக்களை காட்டிக்கொடுத்து விட்டீர்களே என்று மங்கள சமரவீர கூறியதாகவும், மகிந்தானந்த அளுத்கமகேயும் சரத் அமுனுகம தெரிவித்த குற்றச்சாட்டையே கூறி - ஜனாதிபதியையும், சுதந்திரக் கட்சியையும் ஜே.வி.பியுடன் சேர்ந்து காட்டிக்கொடுத்தவர் நீங்கள்தான் என்று பதிலளித்ததாகவும் கூறப்படுகிறது.

பொதுக்கட்டமைப்பு விடயத்தில் அரசு கவிழாததால், விரக்தி அடைந்ததாலேயே மங்கள இவ்வாறு அனைவரையும் சாடியதாகவும் மகிந்தானந்த அளுத்கமகே கூறியிருக்கிறார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்குச் சென்றடையவேண்டும் என்பதற்காகவே பல பிரதி அமைச்சர்களிடம் மிகக் கடுமையான, மோசமான வார்த்தைப் பிரயோகங்களை மங்கள சமரவீர வெளிப்படுத்தியதாகக் கூறப்படுகிறது.

இந்த நிலையில்தான் தன்னைச் சந்திக்கவருமாறு மங்கள சமரவீரவுக்கு கடந்த வெள்ளியன்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அழைப்பு விடுத்தார். அதை மங்கள சமரவீர நிராகரித்துவிட்டார். ஜனாதிபதியின் அழைப்பு மங்களவுக்குக் கிடைத்தபோது அவர் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுடன்தான் இருந்ததாகவும் கூறப்படுகிறது. ஆனால், ஜனாதிபதி செயலகத்திலிருந்து வந்த தொலைபேசி அழைப்பை ஏற்க மங்கள சமரவீர மறுத்துவிட்டதாகக் கூறப்படுகிறது.

மங்கள சமரவீர சந்திப்புக்கு வராத நிலையில் ஜனாதிபதியும் தனது பிள்ளைகளுடன் திக்வெலவுக்கு புறப்பட்டுச் சென்றார் எனத் தெரியவருகிறது.

இதனிடையே ஜே.வி.பி ஆதரவுடன் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை ஜனாதிபதி வேட்பாளராக முன்நிறுத்தும் பணிகளையும் மங்கள சமரவீர தீவிரப்படுத்தியுள்ளதாகவும் தெரியவருகிறது. இது தொடர்பாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் சகோதரர் பாசிலுடன் ஆலோசனை நடத்திய சமரவீர, மகிந்த ராஜபக்ஷவின் ஜனாதிபதித் தேர்தல் பிரசார



செயற்றிட்டங்களை உருவாக்க தனிச் செயலகம் ஏற்படுத்துவது குறித்தும் விவாதித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னதாகவே மங்கள சமரவீர தலைமையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி உடைவதற்கான வாய்ப்புகள் இருப்பதாக கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன. (தே,01)

## எதிர்வரும் நவம்பரில் ஜனாதிபதித் தேர்தல்!

கொழும்பு—

எதிர்வரும் நவம்பர் மாதத்தில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற வாய்ப்பு இருப்பதாக தேர்தல் திணைக்கள வட்டாரத் தகவல்கள் தெரிவித்தன.


1999 ஆம் ஆண்டு டிசம்பர் 22 ஆம் திகதி இரண்டாவது தடவையாக ஜனாதிபதி பதவியைப் பொறுப்பேற்றுக்கொண்ட ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க - தமது பதவிக்காலத்தை 2006 நவம்பர் வரை நீடித்துக்கொண்டதாகக் கூறப்பட்டது. இருப்பினும், அரச வர்த்தமானியில் தேர்தல் திணைக்களத்தால் ஜனாதிபதி சந்திரிகா குமார துங்க 1999 ஆம் ஆண்டு 22 ஆம் திகதி 2 ஆவது தடவையாக பொறுப்பேற்றதாக அறிவிக்கப்பட் டுள்ளது.

முறையான பதவிக்காலம் மேற்குறிப்பிட்ட நாளிலிருந்து 6 ஆண்டுகளில் முடிவடையும். தனது இரண்டாம் பதவிக் காலம் 1999 ஆம் ஆண்டு டிசம்பர் 22 ஆம் திகதி தொடங்குவதை 2000 ஆம் ஆண்டு தாக்கல் செய்த அரச வரைபு ஒன்றில் பதிவுசெய்துள்ளார்.

இதன்படியே டிசம்பர் 2005 ஆம் ஆண்டுக்குள் அவரது 6 ஆண்டு காலப் பதவிக்காலம் முடிவடைகிறது என்று தேர்தல் திணைக்கள அதிகாரி தெரிவித்தார். (01)

## பொதுக்கட்டமைப்பு எதிர்ப்பு கூட்டணியில் இணையுமாறு ஹெல உறுமய அழைப்பு!

கொழும்பு—



பொதுக்கட்டமைப்பிற்கு எதிராக ஹெல உறுமய அமைக்கத் திட்டமிட்டுள்ள கூட்டணியில் இணைந்துகொள்ளுமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஐ.தே.கட்சியின் பிரதித் தலைவர் மற்றும் ஜே.வி.பியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா ஆகியோருக்கு ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச்செயலாளர் ஒமல்பே சோபித தேரர் கடிதங்களை அனுப்பியுள்ளார்.

இவர் அனுப்பியுள்ள கடிதத்தில் -

நான் நடத்திய சாகும் வரையான உண்ணாவிரதப் போராட்டத்தால் பொதுக்கட்டமைப்பிற் கெதிராக மக்கள் கருத்தைக் கட்டியெழுப்ப முடிந்தது. எனவே, பொதுக்கட்டமைப்பால் ஏற்படவுள்ள ஆபத்துக்கள் குறித்து மக்கள் தற்போது பூரணமாக அறிந்துள்ளனர்.

எனவே, இந்தச் சூழ்நிலையில் நாம் அனைவரும் ஒன்றிணைந்து பொதுக்கட்டமைப்பிற்கு எதிராக செயற்படுவது எம் அனைவரதும் கடமையாகுமென அதில் அவர் தெரிவித்துள்ளார். (தே)

## ஜே.வி.பியினரின் அமைச்சுக்கள் செயலாளர்கள் மூலம் இயங்கும்!

கொழும்பு—

ஜே.வி.பியின்ர் வகித்த அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்கள் பதவிக்கு புதிதாக எவரையும் நியமிக்காமல் அந்த அமைச்சுக்களை அமைச்சு செயலாளர் மூலமே கொண்டு நடத்துவதற்குத் தீர்மானித்துள்ளதாக அமைச்சு செயலாளர் ஒன்றியப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இந்த அமைச்சுக்கள் மூலம் முன்னெடுக்கப்பட்ட பத்தாயிரம் குளங்கள், கைத்தொழில் கிராமியம் மற்றும் கடற்தொழில் செயற்திட்டங்களை குழப்பாமல் முன்னெடுத்துச் செல்லவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அமைச்சுப் பதவியிலிருந்து அவர்கள் நீங்கினாலும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்ற வகையில் அவர்கள் விரும்பினால் அந்த செயற்திட்டங்களைக் கண்காணிக்க முடியுமெனவும் அவர் தெரிவித்தார். (தே)

## இரத்மலானை விமான ஓடுபாதையை படம்பிடித்த இராணுவ சிப்பாய் கைது!

கொழும்பு—

இரத்மலானை விமானநிலையத்தை படம் பிடித்துக்கொண்டிருந்த படைச் சிப்பாய் ஒருவர் புகைப்படக் கருவியுடன் கடந்த சனிக்கிழமை கல்கிசை பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

விமான ஓடுதளம், பாதுகாப்புக் காவலரண்கள் என்பவற்றை இந்தச் சிப்பாய் படம்பிடித்துக்கொண்டிருந்த வேளையில் - அங்கு கடமையிலிருந்த விமானப் படைச் சிப்பாய் அவரைப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்தார்.

இந்தச் சிப்பாய் மீது பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டபோது அவரிடம் அனுராதபுரம் - நொச்சியாகம ஹெலம்பவேவ இராணுவமுகாமில் பணிபுரியும் அடையாள அட்டை உட்பட கடிதங்களும் கண்டுபிடிக்கப்பட்டன.

அவரிடம் மேலதிக விசாரணை நடத்தப்பட்டவேளை, அவர் மனநோயாளி போல் நடந்து கொண்டார். இவர் விடுதலைப் புலிகளின் தேவைகளுக்காக விமான ஓடுபாதை மற்றும் பாதுகாப்புக் காவலரண்களை படம்பிடித்துள்ளாரா என்பது குறித்து மேலதிக விசாரணைகள் இடம்பெற்றுவருகின்றன.

சந்தேக நபர் குறித்த மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்வதற்காக இராணுவ பொலிஸாரிடம் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (தே)

## தேர்தல் ஆணையாளரின் பாகிஸ்தான் விஜயம் ரத்து!

கொழும்பு—

தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க பாகிஸ்தானுக்கு மேற்கொள்ளவிருந்த விஜயத்தை திடீரென ரத்துச்செய்துள்ளார். இரண்டு நாள் விஜயமொன்றை அவர் பாகிஸ்தானுக்கு மேற்கொள்ளவிருந்தார்.

சுனாமியின் பின்னரான பொதுக்கட்டமைப்பு கைச்சாத்திடப்பட்டதன் பின்னர் நாட்டில் ஏற்பட்டுள்ள ஸ்திரமற்ற அரசியல் சூழ்நிலையையடுத்தே இந்த விஜயம் ரத்துச்செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அரசாங்க அச்சகத்தில் முழுமையான விமானப்படையினரின் பாதுகாப்பின் மத்தியில் தேர்தல் ஒன்றுக்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அத்துடன், தேர்தல் அதிகாரிகளுக்கான அறிவுறுத்தல்களும் அங்கு அச்சிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (தே,01)

## ஒன்றரை கோடி ரூபா பணத்துடன் பாதாள உலகத் தலைவர் கைது!

கொழும்பு—

பாதாள உலகக் குழுவின் முக்கிய தலைவர் ஒருவர் கடந்த சனிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பில் இயங்கும் முக்கிய பாதாள உலகக் குழுவின் தலைவரான நாவல நிஹால் என்பவரே கொழும்பு - கொள்ளுப்பிட்டியில் வைத்து கைதுசெய்யப்பட்டவராவார்.

நாவல பிரதேசத்தில் இரு சாராருக்கும் சொந்தமாக இருந்த 400 பேர்ச் காணியை விற்பனை செய்வதாயின் - தனக்கு ஒரு பேர்ச்சுக்கு ஒரு லட்சம் ரூபா வீதம் தரவேண்டும் என்றும் 54 பேர்ச் காணியை தனது பெயருக்கு எழுதித்தர வேண்டுமென்றும், இல்லாவிடின் தனது சகாக்களை அங்கு கொண்டு வந்து தாம் குடியமர்த்துவதாகவும் நாவல நிஹால் காணி உரிமையாளர்களுக்கு கூறிவந்துள்ளார்.

இந்த நிலையில் சம்பவ இடத்துக்கு குறித்த காணி தனியார் நிறுவனமொன்றுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளதுடன் நாவல நிஹாலுக்கு ஒன்றரை கோடி ரூபா பணமும் கப்பமாக வழங்கப்பட்டது. இது குறித்து தகவல் அறிந்த பொலிஸார் கொள்ளுப்பிட்டியில் வைத்து நிஹாலையும் அவனது இரு சகாக்களையும் கைது செய்தனர்.

## பொதுக்கட்டமைப்பு உடன்படிக்கை; சில நாட்களில் நடைமுறைக்கு வரும்

### ஜயந்த தனபால

கொழும்பு—

அடுத்த சில நாட்களில் பொதுக் கட்டமைப்பு நடைமுறைப்படுத்தப் படும் என்று அரசாங்க சமாதானச் செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -

பொதுக்கட்டமைப்புக்கான புரிந்துணர்வு ஒப்பந்தப்படி உயர்நிலைக் குழு, பிரதேச குழுக்கள் ஆகியவற்றுக்கான உறுப்பினர்களை அரசு, விடுதலைப் புலிகள் மற்றும் முஸ்லிம் தரப்பினர் நியமிக்க வேண்டியுள்ளது.

மாவட்ட ரீதியான குழுக்களில் அரசியல் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரச நிறுவனங்களின் பிரதிநிதிகள் இடம்பெறுவர்.

உயர்நிலைக் குழு கொழும்பை மையமாகக் கொண்டும் பிரதேச குழு கிளிநொச்சியை மையமாகக்கொண்டும் செயற்படும் என ஜயந்த தனபால மேலும் தெரிவித்தார். (தே,01)



# கொன்பெடரேசன் இறுதியாட்டத்தில் பிரேசில் - ஆர்ஜென்ரீன அணிகள்!







நியூரம்பர்க் —

கொன்பெடரேஷன் கிண்ண இறுதிப் போட்டியில் மோத பிரேசில் - ஆர்ஜென்ரீன அணிகள் தகுதிபெற்றன.

முதல் அரையிறுதிப் போட்டி நியூரம்பர்க் நகரில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. இதில் உலக சம்பியனான பிரேசில், ஜேர்மனியைச் சந்தித்தது. சமபலம் பொருந்திய இரு அணிகள் மோதுவதால் அரங்கில் ரசிகர்கள் கூட்டம் நிரம்பிக் காணப்பட்டது.

தொடக்கத்தில் பிரேசில் அணி கோல் அடித்து முன்னிலை பெற்றது. ஆட்டத்தின் 21ஆவது நிமிடத்தில் அட்ரினோ அபாரமாக கோல் அடித்தார். அடுத்த இரண்டாவது நிமிடத்தில் இதற்கு பதிலடி கொடுத்தது ஜேர்



மணி.

23ஆவது நிமிடத்தில் இந்த அணியின் லுகாஸ் போடோல்ஸ்கி, செபஸ்டிய்ன் ரெய்லர் அளித்த வாய்ப்பைப் பயன்படுத்தி பந்தைத் தலையால் முட்டி கோல் அடித்தார். இதன்பின் 43ஆவது நிமிடத்தில் பிரேசில் அணிக்கு பெனால்டி வாய்ப்புக் கிடைத்தது.

நட்சத்திர வீரரான ரொனால்டினோ இந்த வாய்ப்பைச் சரியாகப் பயன்படுத்திக் கொண்டார். ஆனால் பிரேசிலின் இந்த முன்னிலையும் அதிகநேரம் நீடிக்கவில்லை.


முதல் பாதியின் கடைசி நொடிகள் நெருங்கிக் கொண்டிருந்த நிலையில் ஜேர்மனியின் மைக்கல் பொலக் பெனால்டி வாய்ப்பு மூலம் கோல் அடித்தார். இதன் மூலம் இரு அணிகளும் 2-2 என்ற சமனிலையில் இருந்தன.

பின்னர் இரண்டாவது பாதியில் மீண்டும் அட்ரினா அசத்தினார். 76ஆவது நிமிடத்தில் இவர் அடித்த அபாரமான கோல் அணியின் வெற்றிக்கு வித்திட்டது. தனது உதைபந்தாட்ட வாழ்க்கையில் அட்ரினா அடிக்கும் 250ஆவது கோல் இது. இதன்பின் பிரேசில் வீரர்கள் முழுமையாகத் தற்காப்பு ஆட்டத்துக்கு மாறினர். இதனால் சமனிலை செய்யப் போராடிய ஜேர்மனி ஏமாற்றமடைந்தது. இறுதியில் பிரேசில் 3-2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

இதேவேளை மற்றொரு அரையிறுதி ஆட்டத்தில் ஆர்ஜென்ரீனா - மெக்சிக்கோ அணியுடன் மோதியது. பரபரப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் முதலில் மெக்சிக்கோ வீரர் கார்லோஸ் ஒரு கோல் அடித்தார். இதனால் அந்த அணி முன்னிலை பெற்றது. சிறிது நேரத்தில் ஆர்ஜென்ரீன வீரர் லுசியானோ ஒரு கோல் அடித்தார்.

பின்னர் கடைசிவரை இரு அணிகளும் கோல் அடிக்கவில்லை. இதனால் பெனால்டி முறை கடைப்பிடிக்கப்பட்டது. இதில் ஆர்ஜென்ரீனா 6-5 என்ற கோல் கணக்கில் மெக்சிக் கோவைத் தோற்கடித்தது.

நாளை நடைபெறும் இறுதிப் போட்டியில் ஆர்ஜென்ரீனா, பலம் வாய்ந்த பிரேசில் அணியுடன் மோதவுள்ளது. 3ஆவது இடத்துக்கான ஆட்டத்தில் ஜேர்மனி - மெக்சிக்கோ அணிகள் மோதும்.



கலிபோர்னியாவின் கார்ஸன் நகரில் நடந்த அமெரிக்க தடகளப் போட்டியில் ஆண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப் பிரிவில் வெற்றி எல்லையை ஆக்ரோஷமாக கடக்கிறார் ஜஸ்ரின் கட்லின் (இடது). இந்தப் போட்டியில் பிரபல வீரரான மௌரிஸ் கிறீன் (நடுவில்) காயம் காரணமாக வெளியேறினார்.

## விளையாட்டு

### நட்வெஸ்ட் முத்தரப்பு தொடர்

# பங்களாதேஷ் அணியை தோற்கடித்து இங்கிலாந்து இறுதிப் போட்டியில்!



லீட்ஸ் —

முத்தரப்பு தொடரில் இங்கிலாந்து அணி பங்களாதேஷை 5 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

நேற்றுமுன்தினம் லீட்சில் நடந்த போட்டியில், இங்கிலாந்து, பங்களாதேஷ் அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வென்ற பங்களாதேஷ் கப்டன் ஹபிபுல் பஷார் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார். பிளின்ரொப்பின் வேகத்தில் துஷார் இம்ரான் 32, அஷ்ரபுல் 0, மொர்ராசா 0 என்ற நிலையில் ஆட்டமிழந்தனர். கடந்த மூன்று போட்டிகளில் ஒரு சதம், இரு அரைச்சதம் (100, 94, 58) என அசத்திய அஷ்ரபுல் டக் அவுட்டானது பங்களாதேஷ் அணிக்கு பெரும் பின்னடைவாக அமைந்தது.

ஆனாலும் தொடக்க ஆட்டக்காரர் உமர் 81 ஓட்டங்களை எடுத்து அணியை மீட்டார். 5 பவுண்டரிகளை விளாசிய இவரும் பிளின்ரொப்பில் பந்தில் வீழ்ந்தார். கடைசிக் கட்டத்தில் காலித் மசூத் அதிவிரைவாக ஓட்டங்களைச் சேர்க்க, பங்களாதேஷ் அணி 50 ஓவரில் 7 விக்கெட் இழப்புக்கு 208 ஓட்டங்களை எடுத்தது. 43 பந்துகளில் 42 ஓட்டங்களை எடுத்த காலித் ஆட்டமிழக்காமல் இருந்





தார்.

இங்கிலாந்து தரப்பில் அபாரமாகப் பந்துவீசிய பிளின்ரொப் 4, சைமன் ஜோன்ஸ், கைல்ஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர்.

அடுத்து களமிறங்கிய இங்கிலாந்து அணிக்கு ட்ரெஸ்கொதிக், ஸ்ரரஸ் சிறப்பான தொடக்கம் அளித்தனர். ட்ரெஸ்கொதிக் 43 ஓட்டங்களை எடுத்தார். பிளின்ரொப் 22, சோலங்கி 8, பீற்றர்சன் 23 விரைவாக வெளியேறி அதிர்ச்சி தந்தனர். இருப்பினும் சிறப்பாக ஆடிய ஸ்ரரஸ் அணியின் வெற்றியை உறுதி செய்தார். 98 ஓட்டங்கள் எடுத்த இவர் சதமடிக்கும் வாய்ப்பைத் தவறவிட்டார். இங்கிலாந்து அணி 38.5 ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு 209 ஓட்டங்களை எடுத்து வெற்றிபெற்றது.

பங்களாதேஷ் அணி சார்பில் மஞ்சுரல் 3, ரபிக் 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

இந்தத் தொடரில் இங்கிலாந்து, (5 போட்டிகள், 23 புள்ளிகள்), அவுஸ்ரேலிய (4 போட்டிகள், 14 புள்ளி)களைப் பெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றன. 5 புள்ளிகளுடன் (5 போட்டிகள்) கடைசி இடத்தில் உள்ள பங்களாதேஷ் அணி இறுதிப் போட்டிக்கான வாய்ப்பை இழந்தது.

## உதைபந்தாட்டப் போட்டிகள்!

யாழ்ப்பாணம் —

தமிழீழ விளையாட்டுத்துறை வடமராட்சிப் பிரிவு ஆதரவில் பருத்தித்துறை லீக் நடத்தும் 9 பேர் பங்குகொள்ளும் உதைபந்தாட்டப் போட்டி வதிரி பொமேர்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இன்று மாலை 3.30 மணிக்கு நடைபெறவுள்ள ஆட்டத்தில் சிவன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஞானம்ஸ் விளையாட்டுக்கழக அணியும், மாலை 4.30 மணிக்கு நடைபெறவுள்ள மற்றய போட்டியில் இளவாலை யங்ஹென்றீஸ் அணியை எதிர்த்து பொலிகை பாரதி விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

★ ★ ★

யாழ்ப்பாணம் —

சென்.தோமஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் 7 பேர் பங்குபற்றும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி சென்.தோமஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இன்றுமாலை 3.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் தாவடி காளியம்பாள் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கொற்றாவத்தை சிவானந்தா அணியும், மாலை 4.30 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் கொற்றாவத்தை றேஞ்சஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஊரெழு றோயல் பி அணியும் மோதவுள்ளன.

# விம்பிள்டன் ரெனிஸ் போட்டியிலிருந்து செரினா வில்லியம்ஸ் வெளியேறினார்!



லண்டன் —

விம்பிள்டன் ரெனிஸ் தொடரில் அதிகம் எதிர்பார்க்கப்பட்ட செரினா அதிர்ச்சித் தோல்வி அடைந்தார்.

பெண்கள் ஒற்றையர் பிரிவு மூன்றாம் சுற்றுப் போட்டிகளில் இரண்டு முறை சம்பியன் பட்டம் வென்றுள்ள அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸ், சகநாட்டு வீராங்கனையான ஜில் கிரேபாஷை எதிர்த்து விளையாடினார். முதல் செட்டை இழந்த செரினா, இரண்டாவது செட்டில் சுதாரித்து ஆடினார். ஆனால் இவரால் வெற்றியை எட்டமுடியவில்லை. இறுதியில் 3-6, 6-7 என்ற நேர் செட்களில் கிரேபாஷிடம் தோல்வியை ஒப்புக் கொண்டார்.

மற்றொரு போட்டியில் செரினாவின் சகோதரியான வீனஸ் வில்லியம்ஸ் 7-5, 6-3 என்ற செட்களில் சிலோவாக்கியாவின் டெனிலா ஹன்டுசோவாவை வீழ்த்தினார். நான்காவது சுற்றில் இவர் கிரேபாஷைச் சந்திக்கிறார்.

பெல்ஜியத்தின் கிம் கிளைஸ்டர்ஸ் 6-3, 6-4 என்ற செட்களில் இத்தாலியின் ரோபர்டா வின்சியையும், முதல்நிலை வீராங்கனையான அமெரிக்காவின் டேவன் போர்ட் 6-2, 6-1 என்ற செட்களில் ரஷ்யாவின் டயனரா சபினாவையும், பிரான்சின் மேரி பியர்ஸ் 6-1, 6-4 என்ற செட்களில் சேர்பியாவின் அன்ன இவோனிக்கையும் வீழ்த்தினர்.

ஆண்கள் ஒற்றையர் பிரிவில் இரண்டாம் நிலை வீரரான அமெரிக்காவின் அன்டி ரொடிக் 6-2, 6-2, 7-6 என்ற செட்களில் ரஷ்யாவின் இகோர் அன்ட்ரீவை எளிதில் வீழ்த்தி நான்காவது சுற்றுக்கு தகுதிபெற்றார்.

## தாச்சி போட்டி

யாழ்ப்பாணம் —

யாழ்.மாவட்ட தாச்சி சங்கம், விளையாட்டுத் துறை ஆகியவற்றின் அனுசரணையுடன் கோண்டாவில் கிழக்கு மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகம் நடத்தும் தாச்சி சுற்றுப் போட்டி கோண்டாவில் மறுமலர்ச்சி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றுவருகின்றது.

இன்று மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் சுதுமலை நாவலர் அணியை எதிர்த்து இணுவில் கலாஜோதி அணி மோதவுள்ளது.

# பொதுக்கட்டமைப்பை எதிர்க்கும் சக்திகள் எமது உரிமைகளைப் பெறவிடுவார்களா?

## ரவிராஜ் எம்.பி தெரிவிப்பு



யாழ்ப்பாணம்

பொதுக்கட்டமைப்புக்கே எதிர்ப்புத் தெரிவிக்கும் சிங்களப் பேரினவாதிகள் எப்படி எமது உரிமைகளைத் தரப்போகிறார்கள் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் கேள்வி எழுப்பினார்.

அண்மையில் நடைபெற்ற தொட்டிலடி கண்ணன் முன்பள்ளி மாணவர்களின் விளையாட்டு விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரைநிகழ்த்தும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் -

பலத்த எதிர்ப்புகளுக்கு மத்தியில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்கான பொதுக் கட்டமைப்பு வரைபில் விடுதலைப்புலிகளும், அரசும் கையொப்பம் இட்டுள்ளனர்.

கடந்த காலங்களைப்போலவே இந்த முறையும் சிங்கள பேரினவாதிகள் இந்தப் பொதுக் கட்டமைப்பை எதிர்த்தார்கள். இந்தப் பொதுக்கட்டமைப்பில் எந்தவொரு உரிமைக் கோட்பாடுகளோ அல்லது தேசிய உரிமை தொடர்பான எந்தவொரு அச்சமோ உள்ளடக்கப்படவில்லை.

இப்படியான பொதுக்கட்டமைப்புக்கே எதிர்ப்புத் தெரிவிக்கும் சிங்களப் பேரினவாதிகள் - எப்படி எமது உரிமைகளைத் தரப்போகிறார்கள்? உலகிலேயே எந்தவொரு நாட்டிலும் அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்வதற்கு எதிராக பிக்குகள் உண்ணாவிரதம் இருந்திருக்கிறார்களா? ஆனால் எமது நாட்டில் பிக்குகள் இதைச் செய்கிறார்கள்.

இப்போது உருவாக்கப்பட்டுள்ள சுனாமி பொதுக்கட்டமைப்பானது கூட்டுறவு சங்கங்களுக்கு இருக்கின்ற அதிகாரத்தைவிட சற்று மேலதிகமாக - சுனாமி பாதித்த வீடுகள், வீதிகளைப் புனரமைப்புச் செய்வதற்காக அரசியல் ரீதியாக உருவாக்கப்பட்ட கட்டமைப்பு ஆகும்.

தேசிய உரிமைப் போராட்டத்தில் யுத்தநிறுத்த உடன்பாட்டில் விடுதலைப்புலிகள் கையொப்பம் இடுவதற்கு அவர்கள் இராணுவ பலத்துடன் இருந்தமையே காரணமாகும்.

தமிழீழ விடுதலைப்புலிகள் தமிழ் தேசத்தின் ஏகபிரதிநிதிகள், தமிழர்களின் பங்காளிகள், அரசாங்கத்துக்குச் சமமானவர்கள் என்பது அண்மையில் உருவாக்கப்பட்ட பொதுக்கட்டமைப்பில் விடுதலைப்புலிகள் தமிழர் தரப்பின் பிரதிநிதிகளாகக் கையொப்பம் இட்டதன் மூலம் புலப்படுகிறது.

இதனால் எமது தேசிய போராட்டம் முடிவடைந்து விட்டதாக மக்கள் நினைக்கக்கூடாது. நாம் அனைவரும் ஒன்றுபட்டு, ஒருதலைமையின் கீழ் ஐக்கியப்பட்டு, எமது போராட்டத்தைத் தொடர்ந்து முன்னெடுக்கவேண்டும்.

தமிழ் கூட்டமைப்பினராகிய நாம் - இன்று நாடாளுமன்றில் சந்திரிகாவுக்கு ஆதரவு தெரிவித்தால், 8 அமைச்சுப் பதவிகளைப் பெறலாம். ஆனால் நாம் பேரினவாதிகளின் கைக்கூலிகளாக செயற்பட்டு, எமது இனத்துக்கும், எமது விடுதலைப் போராட்டத்துக்கும் ஒருபோதும் களங்கம் ஏற்படுத்தப்போவதில்லை.

பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டதானது -தமது இன்னுயிரை ஈர்ந்த மாவீரர்களுக்குக் கிடைத்த வெற்றியாகும். அத்துடன் இவர்களது புனிதமான போராட்டத்துக்கு அந்தஸ்தும் கிடைத்துள்ளது. தமிழினம் ஒரணியாகத் திரண்டு, நாம் எமது இலக்குகளை அடைவோம் என அவர் மேலும் தெரிவித்தார். (47)



வலி தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபையின் முன்பள்ளிச் சிறார்களின் விளையாட்டுப் போட்டியில் முன்னாள் செயலாளர் பிரான்சிஸ் விக்டர் சிறார்களுக்கு சான்றிதழ் வழங்கிக் கௌரவிப்பதைக் காணலாம். (100)

# புங்குடுதீவிலுள்ள பொதுக்கிணறு சர்வமத சங்கத்தினரால் புனரமைப்பு

நெடுந்தீவு

புங்குடுதீவில் அமைந்துள்ள சர்வமத சங்கத்தினரது ஆதரவில் புங்குடுதீவுப் பகுதியில் பொதுக் கிணறு புனரமைக்கப்பட்டு மக்கள் பாவனைக்கென விடப்பட்டுள்ளது.

புங்குடுதீவு பிரதான வீதி அருகே - 4 ஆம் வட்டாரத்தில் அமைந்துள்ள பொதுக்கிணறே சர்வமத சங்கத்தினரின் உதவியுடன், அந்தப் பகுதி கிராம அபிவிருத்திச் சங்கத்தினரால் புனரமைக்கப்படுகிறது.

இந்தப் பொதுக்கிணற்றைப் பெருமளவு மக்கள் பயன்படுத்தி வருகின்றனர். மழை காலங்களில் வெள்ளநீர் உட்புகுந்து பாவிக்க முடியாத நிலை இருந்து வந்தபோதும் -

தற்போதைய இந்தப்பணியால் வருடம் முழுவதும் இந்தக் கிணற்றைப் பயன்படுத்த முடியுமென, பயனாளிகள் மத்தியில் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கதாகும். (113)

# புங்குடுதீவில் மழைநீர் சேகரிப்புத் திட்டம்

சுதுமலை

வேலணை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட புங்குடுதீவில் மழை நீர் சேகரிப்புத் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளதாக தெரிய வருகிறது. உவர் நீரை அதிகமாகக் கொண்ட புங்குடுதீவுப் பகுதியில் மழை காலங்களில் பெருமளவான மழை நீரைச் சேகரிப்பதன் மூலம் குடிநீர்த் தேவைகளை பூர்த்தி செய்யக்கூடியதாக இருக்கும்.

இதனடிப்படையில் யாழ். புங்குடுதீவு மகா வித்தியாலயத்தில் மழைநீர் சேகரிப்புத் திட்டத்துக்கான பூர்வாங்க வேலைகள் இடம்பெற்று வருவதாகக் கூறப்படுகிறது.

இந்த வேலைத் திட்டத்தை நீர் வழங்கல் வடிகால் அமைப்புச் சபையினர் மேற்கொண்டு வருகின்றனர். (44)

# எக்ஸ்ரே பிரிவு செயற்பட ஆரம்பம்

பருத்தித்துறை

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் நீண்டகாலமாக இயங்காதிருந்த எக்ஸ்ரே பிரிவு மீண்டும் செயற்பட ஆரம்பித்துள்ளது.

நீண்டகாலமாக இயங்காதிருந்த இந்தப் பிரிவால், பொதுமக்கள் சிரமங்களை எதிர்நோக்கியதோடு தொடர் கோரிக்கைகளும் விடப்பட்டு வந்தன.

இதையடுத்து யாழ்.பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரனின் முயற்சியால் நீண்ட காலமாக இயங்காதிருந்த எக்ஸ்ரே இயந்திரங்கள் இந்தியாவைச் சேர்ந்த தொழில் நுட்பவியலாளர் - உதவி வழங்கும் நிறுவனமொன்றின் உதவியுடன் திருத்தியமைக்கப்பட்டுள்ளது. (14)

# அனர்த்த முகாமைத்துவ பயிற்சிநெறி யாழ். செயலகத்தில் நடைபெறவுள்ளது

யாழ்ப்பாணம்

அனர்த்த முகாமைத்துவப் பயிற்சிப் பட்டறையின் நான்காம் தொகுதியினருக்கான பயிற்சிநெறி - 2005, நாளை முதல் தொடர்ந்து மூன்று தினங்கள் யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

குறித்த மூன்று தினங்களும் காலை 8.30 மணிமுதல் மாலை 5.45 மணிவரை இடம்பெறவுள்ள இந்தப் பயிற்சிப் பட்டறையில் - யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த தெரிவுசெய்யப்பட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம அலுவலர்கள் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

தெரிவு தெய்யப்பட்ட பயிலுநர்களது பெயர் விபரங்கள் சகல பிரதேச செயலகங்களுக்கும் மாவட்டச் செயலகத்தால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன், பயிலுனர்களுக்கான மதிய உணவு, தேநீர் என்பனவும் பயிற்சிக் காலத்தில் வழங்கப்படவுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (113)

# மின்சாரத் தடையால் மாணவர்கள் பாதிப்பு

யாழ்ப்பாணம்

வட்டுக்கோட்டைப் பகுதியில் இரவு வேளைகளில் அடிக்கடி தடைப்படும் மின்சாரத்தால் மாணவர்கள் பெரிதும் பாதிப்படைகின்றனர்.

மாணவர்கள் படிக்கும் நேரமாகிய மாலை 6 மணி தொடக்கம் 10 மணி வரையுள்ள காலப் பகுதியில் அடிக்கடி மின்வெட்டு இடம்பெறுகிறது.

உயர்தரப் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்த மின்தடை குறித்து மாணவர்கள் விசனம் அடைந்துள்ளனர்.

உடனடியாக சம்பந்தப்பட்டோர் இவ்விடயத்தில் தலையிட்டு, சீர் செய்யவேண்டுமெனவும் மாணவர்கள் கோரிக்கை விடுத் துள்ளனர். (207)

# ரி.ஆர்.ஆர்.ஓ நிறுவனம் வடமராட்சியில்

பருத்தித்துறை

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் உப அலுவலகமொன்று - வடமராட்சி கற்கோவளம் பகுதியில் அமைக்கப்படவுள்ளது.

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான சேவையை விரிவுபடுத்தும் நோக்கில் கற்கோவளம், தும்பளை கிழக்கு, புனிதநகர் போன்ற இடங்களுக்கான சுனாமி நிவாரணப் பணிகளை இலகுவாக்கும் வகையில் கற்கோவளம் கடற்கரை வீதியில் இந்த உப அலுவலகம் இயங்கவுள்ளது. (20)

# கியூமெடிக்கா நிதியுதவியுடன் வடமராட்சியில் நிரந்தர வீடுகள்

யாழ்ப்பாணம்

கடந்த டிசம்பர் மாதம் இடம்பெற்ற சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்காக வடமராட்சி வடக்கு, கற்கோவளம் பகுதியில் கியூமெடிக்கா நிறுவனம் நிரந்தர வீடுகளை அமைக்க ஆரம்பித்துள்ளது.

கற்கோவளம் பகுதியில் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 204 நிரந்தர வீடுகளை கியூமெடிக்கா நிறுவனம் அமைத்துக் கொடுக்கவுள்ளது.

இதன் முதற்கட்டமாக தற்போது 10 வீடுகளுக்கு அத்திவாரம் இடப்பட்டு, கட்டடப் பணிகள் வேகமாக நடைபெற்று வருகின்றன.

ஒவ்வொரு வீடுகளும் - 520 சதுர அடி கொண்டதாகவும், இரண்டு அறை, சமையல் அறை, விறாந்தை போன்றன உள்ளடங்கலாகவும் அமைக்கப்படும்.

இந்த வீடு சுமார் 6 லட்சம் ரூபா பெறுமதியுள்ளதாக அமைக்கப்படும். (20)


## இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை இரண்டு



பெயர் : பி.விதுர்சிகன்
முகவரி : மண்கும்பான்.

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : --------
முகவரி --------
பிறந்த ஆண்டு : --------

கூப்பன்கள் புத்தும் புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

--------
பெற்றோர் ஒப்பம்


# ஓய்வூதிய முரண்பாடுகள் தொடர்பான பயிற்சிப்பட்டறை

யாழ்ப்பாணம்

விதவைகள், அனாதைகள் ஓய்வூதிய முரண்பாடுகளை நீக்குதல் தொடர்பான பயிற்சிப் பட்டறை - ஜூலை மாதம் 6, 7 ஆம் திகதிகளில் யாழ். மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளன.

குறிப்பிட்ட தினங்களில் காலை 9 மணிமுதல் மாலை 6 மணிவரை இடம்பெறவுள்ள இந்தப் பயிற்சிப்பட்டறையில் - கொழும்பு ஓய்வூதியத் திணைக்கள அதிகாரிகள் கலந்துகொண்டு பயிற்சி வழங்கவுள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் உள்ள சகல பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பணிமனை ஆகியவற்றைச் சேர்ந்த கணக்காளர் மற்றும் இரு எழுதுநர்கள் இந்தப் பயிற்சியில் கலந்துகொள்ள முடியும் என்பதுடன், பயிற்சிக்காலத்தில் உணவு, தேநீர் என்பனவும் வழங்கப்படவுள்ளன. (113)

# நாவற்குழி கிழக்கில் வேரடி மண் நிகழ்வு

யாழ்ப்பாணம்

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனமும், நாவற்குழி கிழக்கு காந்தி சனசமூக நிலைய மாதர் குழுவும் இணைந்து நடத்தும் பெண்கள் பங்கு பற்றும் பாரம்பரிய விளையாட்டு விழாவான வேரடி மண் நிகழ்வானது -


கடந்த வெள்ளிக்கிழமை நாவற்குழி கிழக்கு காந்தி சனசமூக நிலைய முன்றலில், மாதர் சங்கத் தலைவி தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வின் பிரதம விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலர் வீரசிங்கமும், சிறப்பு விருந்தினர்களாக அகதிகள் புனர்வாழ்வு நிறுவன நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர் தே.தேவானந்த், நாவற்குழி மகாவித்தியலாலய அதிபர் வ.மேகலிங்கம், அகதிகள் புனர்வாழ்வு நிறுவன திட்ட உத்தியோகத்தர் நா.ஜெயந்தி, கிராம அலுவலர் ர.சுஜிதா, முன்னாள் திட்ட உத்தியோகத்தர் க.விக்னேஸ்வரன், தென்மராட்சி அரசியற்துறைப் பொறுப்பாளர் எஸ்.ஈஸ்வரன் ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.




# சிறுவன் கண்டுபிடித்த விமான பாதுகாப்புக் கருவி

விமான விபத்துக்களைத் தடுக்கக்கூடிய ஒரு சாதனத்தைக் கண்டு பிடித்தமைக்காகப் பாடசாலைச் சிறுவன் ஒருவன் விமான நிலைய அதிகாரிகளால் பாராட்டப் பட்டுள்ளான்.



ஸ்கொட்லாந்தைச் சேர்ந்த 12 வயதான டரின் முரே கண்டுபிடித்த இந்தக் கருவி, விமானிகள் விமானத்தை ஓடுபாதையில் இறக்க முன்னர் ஓடுபாதையில் இருக்கக்கூடிய ஆபத்தான பொருட்கள் குறித்து விமானிக்கு எச்சரிக்கக்கூடியது. 2000 ஆம் ஆண்டு ஓடுபாதையில் இருந்த ஓர் இரும்புத் தகட்டினால் கொன்கோட் விமானம் மேலெழும்பும் போது, விமானம் விபத்துக்குள்ளாகிப் பலர் பலியானமையே சிறுவனின் இந்தக் கண்டுபிடிப்புக்கு மூலமாக அமைந்திருந்தது. இவனது இந்தச் சாதனத்தை மேலும் அபிவிருத்தி செய்வது தொடர்பாக பிரிட்டிஷ் விமான நிலைய அதிகாரசபை ஆலோசித்து வருகிறது.

# கிரடிட் கார்ட் மோசடி

உலகளாவிய ரீதியில் 40 மில்லியன் கடன் அட்டைகள் முடக்கப்பட்டிருப்பதாக அமெரிக்காவின் பிரபல வங்கி ஒன்று கூறுகிறது. இவ்வளவு காலமும் போலி கிரடிட்கார்ட் பாவனையால் நட்டப்பட்டுக் கொண்டு வந்த இந்த நிறுவனம், இப்போது வெற்றிகரமாக இயங்கத் தொடங்குகிறது. இத்தகைய நடவடிக்கைக்கு அமெரிக்காவின் எவ்.பி.ஐ நிறுவனம் உதவி செய்ததாகக் கூறப்படுகிறது. இன்றும் கூடுதலான மோசடிக்காரர்கள் இருப்பதாகவும், அவர்களைப் பிடிப் பதற்கான முயற்சிகளில் எவ்.பி.ஐ இறங்கியிருப்பதாகவும் தற்போது கூறப்படு கிறது. இதன் பிறகு பல வங்கிகள் இரகசியமாக எவ்.பி.ஐயுடன் தொடர்பு கொண்டுள்ளன. சர்வதேசளவில் இத்தகைய ஏமாற்று வேலைகளில் சில வங்கியதிகாரிகளுக்கும் தொடர்பிருப்பதாகக் கூறப்படுகிறது.



இதன் காரணமாக வங்கிகள் முழுவதுமே ஒருதரம் எவ்.பி.ஐயினரால் பரிசோதிக்கப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை எனக் கூறப்படுகிறது.

# இசையால் அதிரும் அரங்குகள்

பொதுமக்கள் கூடும் அரங்குகளில் அவர்களால் எழுப்பப் படும் ஒலிகள், அதிர்வுகளினால் அரங்குகளின் கட்டுமான மூலப்பொருட்களில் பாதிப்புகள் ஏற்படுவதாக, அண்மையில் பிரிட்டனில் செய்யப்பட்ட ஆய்வு ஒன்றில் தெரியவந்துள்ளது. ஷெபீல்ட் பல்கலைக்கழக ஆய்வாளர்கள் மேற்கொண்ட இந்த ஆய்வில், அரங்கு அதிரும் வகையில் நடக்கும் இசை நிகழ்வுகள், அங்கு எழுப்பப் படும் கூச்சல்கள், துள்ளிக் குதிப்பதால் ஏற்படும் உதைப்பு என்பன அரங்கு பாதிப்படைய வழி வகுப்பதாகத் தெரியவந்துள்ளது.



இந்த ஆய்வின் அடிப்படையில் எதிர்காலத்தில் புதிய தொழில்நுட்ப முறைகளை நிர்மாணப்பணிகளில் புகுத்துவது குறித்து ஆலோசிக்கப்பட்டுவருகிறது.

# அதிகரிக்கும் வறள் வலயம்

தவறான பயிர்ப் பராமரிப்பு மற்றும் முறையற்ற நீர் விநியோகம் என்பவற்றால் பூமியில் வறள்வலயம் விஸ்தரிக்கப்படும் அபாயம் எழுந்துள்ளதாக, ஐ.நா ஆய்வுக்குழு ஒன்று எச்சரித்துள்ளது. ஏற்கனவே பூமியில் வறள் வலயம் 10 - 20 சதவீதம் அதிகரித்துள்ளது. 22 மில்லியன் டொலர் செலவில் நான்கு வருடமாகச் செய்யப்பட்ட ஆய்விலிருந்து இது தெரியவந்துள்ளது.



ஏற்கனவே பூமியில் 41 வீதமான வறள் நிலப் பிரதேசம் காணப்படுகிறது. இதில் மத்திய ஆசிய, வட ஆபிரிக்கப் பகுதிகள் உள்ளடங்கும். தற்போது பல நிலங்கள் தரிசாக மாறிவருவதால், வறுமைகாரணமாகசூழல் அகதிகள் என்ற ஒரு பிரிவினரும் தோற்றுவிக்கப்பட்டுள்ளனர்.




# மெகா வைத்தியசாலை உருவாகுமா?

வங்கியதிகாரிகளுக்கும் தொடர்பிருப்பதாகக் கூறப்படுகிறது.

இதன் காரணமாக வங்கிகள் முழுவதுமே ஒருதரம் எவ்.பி.ஐயினரால் பரிசோதிக்கப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை எனக் கூறப்படுகிறது.

# மிருக காலடித் தடங்களை இனம் காணும் இராணுவ சாதனம்


இராணுவ உபயோகத்துக்குப் பயன்படும் நுண்புலன் கருவிகளின் உதவியுடன் யானைகளின் கா[illegible]தடங்களைக் கண்டுபிடித்து, யானைகள் குறித்து ஆய்வு நடத்தும் புதிய முறை ஒன்றை அமெரிக்க விஞ்ஞானிகள் கடைப்பிடிக்கின்றனர்.



நமீபியா எஸ்டோஷா தேசியப் பூங்காவிலுள்ள யானைகள் மற்றும் பாரிய விலங்குகள் குறித்து இந்தக் கருவிகள் மூலம் கணக்கெடுக்கப்பட்டு வருகிறது. ஜியோபோன்ஸ் என்ற இந்தக் கருவிகள் வியட்நாமியப் போரில் எதிரிப் படைகளின் நகர்வுகள் குறித்துக் கண்டறிய அமெரிக்கப் படைகளால் உபயோகப்படுத்தப்பட்டன. நடக்கும்போது ஏற்படும் நில அதிர்வை இந்தக் கருவிகள் உணரும் ஆற்றல் கொண்டவை. ஒவ்வொரு இனவிலங்குக்கும் நடக்கும் போது வெவ்வேறு ஒலி எழுவதால், இந்தக் கருவிகள் மூலம் அவற்றை இனங்காணலாம்.

# மெகா வைத்தியசாலை உருவாகுமா?

மிகச் சிறப்பான அதிக தரமுடைய வசதிகளுடைய வைத்தியசாலை ஒன்றை உருவாக்கும் திட்டம் தற்போது கைவிடப்பட்டு இருப்பதாக லண்டனில் இருந்து வரும் செய்திகள் கூறுகின்றன. இதற்காக இவ்வளவு காலமும் செலவு செய்யப்பட்ட 14 மில்லியன் ஸ்ரேலிங் பவுண்கள் வீணடிக்கப்பட்டிருக்கின்றன. இதை முன்னிலைப்படுத்திய லண்டன் நிறுவனம் தன்னுடைய திட்டத்தைக் கைவிட்டு விட்டதாக அறிவித்திருக்கிறது.



இதற்குரிய செலவாக அந்தநிறுவனம் ஆரம்பத்தில் 350 மில்லியன் ஸ்ரேலிங் பவுண்களைக் கேட்டிருந்தது. ஆனால் திடீரென அது செலவினை 800 மில்லியன் ஸ்ரேலிங் பவுண்களாக அதிகரித்துவிட்டது. இது தான் இந்தத் தடைக்குக் காரணம் எனக் கூறப்படுகிறது. உண்மையில் இத்தகைய வைத்தியசாலை ஒன்று தேவைதான். அதற்காகப் பணத்தினை இப்படிச் செலவளிப்பது ஒரு கஷ்டமான காரியம் என சுகாதார அமைச்சு கூறுகிறது. இருந்தாலும், பேச்சுவார்த்தைகள் மூலம் இந்தத் திட்டத்தைத் தொடர்ந்து இந்த மெகா வைத்தியசாலையைக் கட்டி முடிக்க வேண்டும் என மக்கள் விரும்புகின்றனர்.

# சிறுவருக்கு ஆபத்தாகும் புகை



சிறு பிள்ளைகள் இருக்கும் வீடுகளில் புகைப்பிடிப்பதைத் தடை செய்யவேண்டும் என சுமார் முக்கால் வாசிப் பிரிட்டிஷ் மக்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். அண்மையில் மேற்கொண்ட கருத்துக் கணிப்பு ஒன்றில் 72 சதவீதமானோர் சிறுவர்களிடையே புகைபிடிப்பதைத் தடைசெய்யவேண்டும் என விரும்புகின்றனர். இவர்களில் 65 வீதமானோர் புகைப்பிடிப்பவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

பலருக்கு தமது புகைப்பிடிப்பு பிள்ளைகளுக்கு பாதிப்புத்தரும் என்பதை அறியாமல் உள்ளதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பிரிட்டனில் 10 சிறுவர்களில் 4 சிறுவர்கள் புகைப்பிடிப்பவர்கள் உள்ள வீடுகளில் வசிக்கின்றனர். சுமார் 1275 பேரிடம் தொலைபேசி மூலம் இந்தக் கருத்துக் கணிப்பு நடாத்தப்பட்டுள்ளது.

# திரை விமர்சனம்



## அந்நியன்

முதல் முறையாக இயக்குநர் ஷங்கர் தன்னுடைய பரிவாரங்களை மாற்றி எடுத்தபடம் இது. ஆனாலும் கதை பழைய கதைதான்.

பயந்த சுபாவமுடைய வக்கீல் விக்ரம் – குற்றங்களைக் கண்டு பொறுக்கமாட்டார். சட்டத்துக்குக் கட்டுப்பட்டு நடப்பவர். சதாவைக் காதலிக்கிறார். ஆனால், அவர் – இவர் காதலை ஏற்றுக் கொள்ளவில்லை.



தீடீரென அந்நியனாக மாறும் விக்ரம் – தனிமனிதனாக எதிரிகளைப் பழிவாங்குகிறார் ஏன்? இது தான் படத்தின் மீதிக் கதை.

நடிப்பில் தனக்கு நிகர் தானே என அற்புதமாக நடித்திருக்கிறார். அடிதடி, கோர்ட், காதல் என பலதரப்பட்ட பாத்திரங்களையும் எடுத்து நடித்திருக்கிறார் விக்ரம்.

நகைச்சுவைக்கு விவேக் வருகிறார். ஆனால் விக்ரம் இருப்பதால் எடுபடவில்லை. சதாவுடைய நடிப்புக்கு இங்கு இடமில்லை. முற்று முழுதாக விக்ரம் எடுத்துவிட்டதால், அங்கு ஒருவரையுமே காணவில்லை போன்ற பிரமிப்பு. வழமைபோல சுஜாதாவின் வசனம் மிளகாய்த்தூள் பொடிதான். பிரகாஷ்ராஜ் உடைய சில ஓவர் வசனங்களை சுஜாதா தானா எழுதினார்? ஹரீஸ் ஜெயராஜின் இசையில் வைரமுத்து, கபிலன் ஆகிய கவிஞர்களுடைய பாடல்கள் மிகவும் சிறப்பாக உள்ளன. ஒளிப்பதிவு ரவிவர்மன், மணிகண்டன் ஆகியோர் ஷங்கருக்குக் கைகொடுத்திருக்கிறார்கள். கலை – சாபு சிரிப். எடிட்டிங் வி.டி.விஜயன்.




சண்டைப்பயிற்சி பீட்டர் ஹெய்ன். இதில் நூறு குங்பூவீரர்களுடன் விக்ரம் மோதும் காட்சி காதிலை பூ. இருந்தாலும், யாருடன் கூட்டணி அமைத்தாலும் எனக்கே வெற்றி என்கிறாரா ஷங்கர்.

– ரஜிதா –

# பயனற்ற கண் மருந்து

கண்நோய்க்குப் பயன்படுத்தப்படும் Chloramphenicol என்ற நோயெதிர்ப்பு மருந்தால் பெரிதாகப் பயன் ஏதும் கிடைப்பதில்லை என அண்மைக்கால ஆய்வுகளிலிருந்து தெரியவந்துள்ளது.

ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் செய்த ஆய்வில் இதைப் பயன்படுத்தினாலும், பயன்படுத்தாவிட்டாலும் விளைவு ஒன்றுதான் என அறியப்பட்டுள்ளது.



பயன்பாட்டு அறிவுறுத்தல் இன்றி விற்பனையாகும் இத்தகைய மருந்துகளைத் தடைசெய்வது குறித்து பிரிட்டனில் மருந்துகள் கட்டுப்பாட்டுக் கழகம் சிந்தித்து வருகிறது. ஏற்கனவே பல கிருமிகள் இத்தகைய நோயெதிர்ப்பு மருந்துகளுக்கு எதிரான எதிர்ப்புச் சக்தியை பெற்றிருப்பதாகத் தெரியவந்துள்ளது. Chloramphenicol கடந்த 50 ஆண்டுகாலமாகப் பாவனையிலுள்ளது.

# அழியும் கசட்டுக்கள்

றேடியோ கசட்டுக்கள் தற்போது மக்கள் பாவனையில் இருந்து மறைந்து கொண்டுவருகின்றன. சிடிக்களின் ஆதிக்கம் இவற்றைச் சந்தையை விட்டு ஓட ஓட விரட்டியிருக்கிறது.



40 ஆண்டுகளுக்கு முன் மிகவும் பலத்த எதிர்பார்ப்புடன் பாவனைக்கு வந்த இந்த கசட்டுக்கள், குறுகிய காலத்தில் உலகை விட்டு மறையும் என அப்போது எவரும் எதிர்பார்க்கவில்லை. ஆனாலும், 1960 ஆம் ஆண்டளவில் உருவாக்கப்பட்ட இத்தகைய கசட்டுக்கள் 1980 ஆம் ஆண்டளவில் இசைத்தட்டுக்களாக மாறிய பொழுது கூட, கசட்டுக்களின் செல்வாக்குக் குறையவில்லை. மத்திய கிழக்கு நாடுகளிலே அதிகம் கசட்டுக்கள் பாவிக்கப்பட்டும், விற்பனை செய்யப்பட்டும் வந்தன. ஆனால், இவை கண்ணாடிப் பெட்டிக்குள் பாதுகாத்து வைத்தபொழுது, எந்த விதமான சிக்கலும் இல்லாமல் தான் இருந்தது. ஆனால் தற்போது இவை அழியத் தொடங்கியிருக்கின்றன. இதன் காரணமாக பழையபாடல்கள் அதாவது கசட்டுக்களில் உள்ளவற்றை எம்.பி.3 அல்லது சிடிக்களில் பதிய வேண்டியுள்ளது. இரசாயன மாற்றம் ஒன்றினாலேயே இவை அழிகின்றன எனக் கூறப்படுகிறது.

# சோயாவால் கருத்தடை


குழந்தைப்



# செயலிழந்த கொஸ்மொஸ்


ளது. இரசாயன மாற்றம் ஒன்றினாலேயே இவை அழிகின்றன எனக் கூறப்படுகிறது.


# சோயாவால் கருத்தடை



குழந்தைப் பேறு இல்லாத பெண்கள் சோயா உணவுகளைத் தவிர்க்கவேண்டும் என, ஐரோப்பிய நாட்டு விஞ்ஞான மருத்துவ ஆய்வாளர்கள் எச்சரிக்கை விடுத்திருக்கிறார்கள். இந்த வகை உணவுகள் கருப்பையில் உருவாக்கும் முட்டைகளின் மீது பாதிப்பை ஏற்படுத்துகின்றன. கருத்தரிக்காது இருக்கின்ற பெண்களிடம் பெறப்பட்ட ஆராய்ச்சிகளின்படி, அவர்களில் பெரும்பாலானோர் சோயா உணவுகளையே அதிகம் உண்டு வருகிறார்கள். விந்துகள், பெண் முட்டைகளைக் கருத்தரிக்கவைக்கும்பொழுது, சோயா உணவுகளால் உருவாக்கப்படுகின்ற ஒரு புரதக் கட்டமைப்பு இந்தச் செயற்பாட்டுக்கு மிகவும் தடையாக இருக்கிறது. இதே வேளை இரத்தச் சுற்றோட்டத் தொகுதியில் இரத்த அமுக்க வீதம் அதிகரித்துக்கொண்டிருக்கின்றமையினாலும், சில தாக்கவீதத் தடை ஏற்படுவதாக வைத்திய ஆராய்ச்சியாளர்கள் கூறிக்கொண்டு இருக்கிறார்கள். இத்தகைய பரிசோதனைகள் முதன் முதலில் எலிகளிலேயே செய்யப்பட்டு வெற்றி கொள்ளப்பட்டன எனவும் கூறப்படுகிறது.

# செயலிழந்த கொஸ்மொஸ்





சூரிய ஒளி மூலம் சக்தி பெற்று பயணிக்கக் கூடிய செய்மதி ஒன்று செயலிழந்து வருவதாக விஞ்ஞானிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

தனியார் நிதியுதவி மூலம் செலுத்தப்பட்ட ரஷ்யாவின் கொஸ்மொஸ் - 1 என்ற இந்தச் செய்மதியுடனான சகல தொடர்பும் துண்டிக்கப்பட்டுள்ளதாகவும், ரொக்கட்டிலிருந்து இந்தச் செய்மதி தனியாகப் பிரிந்து செயற்பட ஆரம்பித்து விட்டதா என அறியமுடியாமலிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பரிசோதனை முயற்சியாக விடப்பட்ட இந்தச் செய்மதி சூரிய ஒளியிலிருந்து சக்தி பெற்று இயங்குவதால், செலவு குறைந்ததாகவும், அதிகூடிய தூரம் பயணிக்கக் கூடியதாகவும், எரிபொருள் கலன்களை விட வேகம் கூடியதாகவும் இருக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. ரஷ்ய நீர் மூழ்கிக் கப்பல் ஒன்றிலிருந்தே இது ஏவப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# தலைவரின் தீர்க்கதரிசனமும், திடமும் தமிழீழத்தைப் பெற்றுத் தரும்!

## அரசறிவியற் கல்லூரி பொறுப்பாளர் பார்த்தீபன்

கிளிநொச்சி—

தீர்க்க தரிசனம் உடைய எமது தலைவரிடம் நல்ல திடமுண்டு. எம்மிடம் படைபலம், மக்கள் பலமுண்டு. இதன் மூலம் நாம் தமிழீழத்தை மிக விரைவில் வென்றெடுப்போம் என்பது உறுதி என, தூயவன் அரசறிவியற் கல்லூரி பொறுப்பாளர் பார்த்தீபன் தெரிவித்தார்.

பரந்தன் - கோரக்கன் கட்டு கிராமத்தில் நடைபெற்ற சமகாலக் கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

கடந்த முப்பது ஆண்டுகளின் முன் சிங்களக் காடையர்களின் வன்முறைகளால் மலையகத்திலிருந்தும், ஏனைய பிறமாவட்டங்களிலிருந்தும் இடம் பெயர்ந்து, அகதிகளாக்கப் பட்டு மாறிமாறிப் பல இடங்களிலும் வாழ்ந்து வந்த மக்கள் - இன்று ஒரு மூன்று வருடகாலமாக இந்த இடத்தில் நிம்மதியாக வாழ்ந்து வருகிறார்கள்.

எமது தலைவர் நாம் ஒவ்வொருவரும் எமது சொந்தக் காலில் நிற்கவேண்டும் என எண்ணிப் போராடியதன் வெற்றிதான் இந்த கோரக்கன் கட்டு கிராம குடியேற்றம்.

மலையகம், திருகோணமலை, மணலாறு, மட்டக்களப்பு போன்ற எமது தாயக பிரதேசங்கள் எங்கும் கடந்த காலங்களில் ஏற்பட்ட வன்முறைச் செயல்களால் இந்த இடங்கள்யாவும் தமக்கு உரித்தானதென எண்ணி, சிங்களவர் எமது மக்களை- நாயைச் சுட்டது போன்று சுட்டும், வெட்டியும் கொன்றும் அந்த இடங்களில் சிங்களவரைக் குடியேற்றினர். ஆனால், இன்று எமது போராட்டங்களின் மூலம், பெரும் பகுதியை எமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்துள்ளோம்.

எதிரியை இங்கிருந்து மட்டும் துரத்தவில்லை. கட்டுநாயக்க, பலாலி விமான நிலையம், திருகோணமலைத் துறைமுகம், கொழும்புத் துறைமுகம், காங்கேசன்துறைத் துறைமுகம் என எதிரியின் முக்கிய இடங்களுக்குச் சென்று தாக்கி, அழித்து அவனை அதிரவைத்தோம்.

இன்று நாம் உலகத்தின் பார்வையில் ஓர் உயர்ந்தநிலையில் உள்ளோம். சுனாமி அழிவு மீள் கட்டுமானப் புனர்வாழ்வு அபிவிருத்தி நிதியைக்கூட, எம்மை விட்டு அரசிடம் கொடுக்க முடியாத நிலைக்கு நாம் வளர்ச்சியடைந்துள்ளோம்.

எமது பகுதிக்கு உரிய நிதியை நாமே பெற்று, எமது மக்களுடைய அபிவிருத்தி வேலைகளை நாமே முன்னெடுக்க வேண்டிய நிலையில் உள்ளோம். நாம் எமது வளங்களைப் பயன் படுத்தி, மக்களின் வாழ்வியலை வழிநடத்த எம்மை முழுமையாக அர்ப் பணிப்போம்.

வடக்கில் இன்று எமது மக்களின் எவ்வளவு பெறுமதிமிக்க வீடுகள், காணிகள் என்பன எதிரியின் உயர்பாதுகாப்பு வலயத்தில் சிக்குண்டு கிடக்கிறது. இதனை நாம் மீட்டெடுக்க வேண்டும். மீட்டெடுத்து எமது மக்களை அவர்களின் சொந்த நிலங்களில், சொந்த வீடுகளில் வாழவைக்க வேண்டும். எமக்கென்று ஒரு நாடு வேண்டும்.

இன்று எம்மிடம் நீர்மூழ்கிக் கப்பல் உண்டு. விமானப்படை உண்டு. கனரக போர்த் தளபாடங்கள், கடற்படை, தரைப்படை, விமானப்படை என்பன இருக்கிறது எனக் கூறிக் கொண்டிருக்கும் எதிரி, எம்மிடம் ஒரு பெரிய மக்கள் படை இருப்பதைக் கண்டு அஞ்சுகிறான்.

பல வருடங்களாக எதிரி அடித்துப் பிடித்த வன்னிப் பிரதேசத்தை - ஒரு சில நாட்களில் ஒட்டிசுட்டானில் ஆரம்பித்து, முகமாலை போய் நின்றதை, தலைவருடைய போர்த் திட்டத்தை ஒருவரும் மறக்க முடியாது.

தீர்க்க தரிசனம் உடைய எமது தலைவரிடம் நல்ல திடமிண்டு. எம்மிடம் படைப்பலம், மக்கள் பலம் உண்டு. இதன் மூலம் நாம் எமது தமிழீழத்தை மிக விரைவில் வென்றெடுப்போம் என்பது உறுதி. இதற்கு அனைவரும் அணிதிரண்டு ஒன்றிணைவோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

# மார்புச் சிகிச்சைக்கான நாள் மாற்றம்

முல்லைத்தீவு—

முல்லைத்தீவு வைத்திய சாலையில் மாதத்தில் 2 , 3 ஆம் செவ்வாய்க் கிழமைகளில் மார்புச் சிகிச்சை நடைபெற்று வருகிறது.

இந்தச் சிகிச்சையில் - இன்று நடைபெற இருந்த சிகிச்சை நடைபெறமாட்டாது எனவும், இதற்குப் பதிலாக இந்தச் சிகிச்சை நாளை மறுதினம் நடைபெறும் என்றும் பொது சுகாதார பரிசோதகர் தெரிவித்துள்ளார்.

(வெ)

# வற்றும் நீர் நிலைகளிலுள்ள மீன்களை உண்ணவேண்டாம்

## சூழல் சுற்றாடல் பகுதி தெரிவிப்பு

முல்லைத்தீவு—

முல்லைத்தீவு மாவட்டத்தில் சுனாமி தாக்கத்துக்குட்பட்ட கரையோரப் பகுதிகளிலுள்ள ஆறுகள், நீரேரிகள், கால்வாய்கள், குளங்கள், குட்டைகள் போன்ற நீர் நிலைகளில் கடல் நீர் புகுந்து மாசுபடுத்தியுள்ளது.

தற்போது ஏற்பட்டுள்ள கடும் வரட்சி காரணமாக நீர் நிலைகள் வற்றி வருகின்றன. இதனால் இந்த நீர் நிலைகளிலிருந்து துர் நாற்றம் வீசுகிறது.

இதேவேளை இந்த நீர் நிலைகளிலிருந்து பிடிக்கப்படும் மீன்கள் நஞ்சாக்கம் அடைந்துள்ளதோடு, அவற்றை உண்பதால் வும், இதனை மீறுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என முல்லைத்தீவு அரசசெயலக சூழல் சுற்றாடல் பகுதியினர் அறிவித்துள்ளனர்.

# ஓமந்தை சோதனைச் சாவடியில் சந்தேகத்தின் பேரில் மூவர் கைது

கிளிநொச்சி—

ஓமந்தை சோதனைச் சாவடியில் படையினரின் வழமையான சோதனை நடவடிக்கையின் போது, வானொன்றிலிருந்து எட்.என்.சி ரக துப்பாக்கிச்

4.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் - வான் சாரதியான புத்தளத்தைச் சேர்ந்த ஐ.எம்.என்.எஸ் மஃறூப் மற்றும் வாகனத்தில் இருந்த பயணிகளான பாணந்துறையைச் சேர்ந்த

## இன்றைய நாளில்... அன்று நிகழ்ந்தவை...

### ஜுன் - 28

1876 : நவாலியூர் சோமசுந்தரப் புலவர் பிறந்தார்.

1889 : வெள்ளிக் கிரகத்தின் வானியல் பஞ்சாங்கத்தைக் கணித்தவரும் புதிய வால் நட்சத்திரம் ஒன்றைப் பற்றிய தகவல்களை முதண் முதலாகத் தந்தவரும் அமெரிக்காவின் வானியல் ஆய்வு அமைப்பில் முழுநேர ஊழியராக நியமிக்கப்பட்ட முதல் பெண்மணியும் சர்வதேச புகழ் பெற்ற வானியல் விஞ்ஞானியுமான மேரியா மிட்ச்செல் மரணமடைந்தார்.

1909: உலகின் முதலாவது விமானக் கண்காட்சி பிரான்ஸில் டுவாய் என்னுமிடத்தில் ஆரம்பமாகியது.

1914 : ஒரு கோடிக்கும் மேற்பட்ட மக்களின் இறப்பினையும் பலநூறுகோடி சொத்திழப்பினையும் ஏற்படுத்திய முதலாவது உலக யுத்தத்திற்கு காரணமன ஒஸ்திரியா - ஹங்கேரி பட்டத்து இளவரசரான பிரான்ஸ் பேர்டினண்டும், அவரது மனைவி ஸோபியும் போஸ்னியாவில் இளைஞர் ஒருவரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

1917: பிரிட்டிஷ் கப்பல் தொகுதியோடு சேர்ந்து வரும் நடுநிலை நாடுகளது கப்பல்களும் எதிரிக்கப்பல்களாகவே கருதப்பட்டு, தாக்கியழிக்கப்படும் என ஜேர்மனி அறிவித்தது.

1918: போர்க்கால நிலை கருதி ரஷ்யாவில் 2000 வரையிலான பாரிய தொழிற்சாலைகள் தேசிய உடமையாக்கப்பட்டன.

1919: முதல் உலகப் போர் அதிகார பூர்வமாக முடிவடைந்தது 75000 வார்த்தைகள் 440 விதிகள் 200 பக்கங்கள் கொண்ட வெர்ஸெயில்லஸ் உடன்படிக்கையில் ஜேர்மனியின் வெளியுறவு அமைச்சர் ஏச்.முல்லர் ஒப்பமிட்டதன் மூலம் அதிகார பூர்வமாக போர் முடிவுக்கு வந்ததாக அறிவிக்கப்பட்டது. இதன் மூலம் ஜேர்மனி தனது நிலப் பரப்பில் 13 சதவீதத்தையும் தனது ஆதிக்கத்தின் கீழ் வைத்திருந்த அனைத்துக் குடியேற்றங்களையும் இழந்தது.

✪ : சர்வதேச சங்க அமைப்பின் விதிகளில் முதல் பகுதி கையெழுத்திடப்பட்டது.

✪ : அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் பாதுகாப்பு ஒப்பந்தத்தில் ஒப்பமிட்டன.

1939: பயிற்சி பெற்ற இந்தியத் தொழிலாளர்கள் போர்ப் பணியில் இணைந்து கொள்ள வேண்டும் என இந்திய வைஸ்ராய் சட்டம் பிறப்பித்தார்.

1950: தென் கொரியாவின் தலை நகரான சியோவை வடகொரியப் படைகள் கைப்பற்றின.

1951 : உலக அமைதிக்கு வழிகாணும் எனக்கூறி நேருவினால் பஞ்சசீலக் கொள்கை வெளியிடப்பட்டது.

1956 : தமது விடுதலையையும், உணவையும் கோரி போலந்தில் பொஸ்னான் என்ற இடத்தில் தொழிலாளர்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தில் கம்யூனிஸ்ட் ஆட்சியாளர்களால் நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் சுட்டுக் கொல்லப் பட்டனர்.

1965: இந்த வருடம் ஏப்ரல் 6 ஆம் திகதி ஏவப்பட்ட ஆரம்பப் பறவை (EARLY BIRO) என்ற தகவல் தொடர்பு செயற்கைக் கோள் மூலமாக அமெரிக்கா, பிரிட்டன், ஜேர்மனி, பிரான்ஸ், சுவிட்சலாந்து, இத்தாலி ஆகிய நாடுகளுக்கிடையே தொலை பேசித் தொடர்புகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

யோரப் பகுதிகளிலுள்ள ஆறுகள், நீரேரிகள், கால்வாய்கள், குளங்கள், குட்டைகள் போன்ற நீர் நிலைகளில் கடல் நீர் புகுந்து மாசுபடுத்தியுள்ளது.

தற்போது ஏற்பட்டுள்ள கடும் வரட்சி காரணமாக நீர் நிலைகள் வற்றி வருகின்றன. இதனால் இந்த நீர் நிலைகளிலிருந்து துர்நாற்றம் வீசுகிறது.

இதேவேளை இந்த நீர் நிலைகளிலிருந்து பிடிக்கப்படும் மீன்கள் நஞ்சாக்கம் அடைந்துள்ளதோடு, அவற்றை உண்பதால் சொறி, சிரங்கு போன்ற பல தொற்றுநோய்கள் ஏற்பட வாய்ப்பு இருப்பதால், இந்த நீர் நிலைகளிலிருந்து மீனைப் பிடித்து உண்ணவேண்டாம் எனவும்,

அத்தோடு பிடித்து வியாபாரம் செய்யவேண்டாம் என

துள்ளனர்.

# ஓமந்தை சோதனைச் சாவடியில் சந்தேகத்தின் பேரில் மூவர் கைது

கிளிநொச்சி

ஓமந்தை சோதனைச் சாவடியில் படையினரின் வழமையான சோதனை நடவடிக்கையின் போது, வானொன்றிலிருந்து எப்.என்.சி ரக துப்பாக்கிக்குரிய ரவைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளதுடன், வானிலிருந்த சாரதி உட்பட இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் படைத்தலைமையகம் தெரிவித்துள்ளது.

கடந்த சனிக்கிழமை மாலை 4.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் - வான் சாரதியான புத்தளத்தைச் சேர்ந்த ஐ.எம்.என்.எஸ் மஃறூப் மற்றும் வாகனத்தில் இருந்த பயணிகளான பாணந்துறையைச் சேர்ந்த மொகமட், இஸ்மாயில் ஆகிய இருவருமே கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் இருவரும் மேலதிக விசாரணைகளுக்காக ஓமந்தை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

1956 : தமது விடுதலையையும், உணவையும் கோரி போலந்தில் பொஸ்னான் என்ற இடத்தில் தொழிலாளர்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தில் கம்யூனிஸ்ட் ஆட்சியாளர்களால் நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

1965: இந்த வருடம் ஏப்ரல் 6 ஆம் திகதி ஏவப்பட்ட ஆரம்பப் பறவை (EARLY BIRO) என்ற தகவல் தொடர்பு செயற்கைக் கோள் மூலமாக அமெரிக்கா, பிரிட்டன், ஜேர்மனி, பிரான்ஸ், சுவிட்சலாந்து, இத்தாலி ஆகிய நாடுகளுக்கிடையே தொலை பேசித் தொடர்புகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

1984: பிரிட்டனில் கடந்த 104 ஆண்டு காலமாக வெளிவந்து கொண்டிருந்த டிட்பிட்ஸ் என்ற பத்திரிகை நிறுத்தப்பட்டது.

தொகுப்பு - சந்துரு



சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் சிறப்புத் தளபதி லெப்டினன்ட் கேணல் ராஜனின் 5 ஆம் ஆண்டு நினைவாகவும், யாழ்.செல்லும் படையணியின் சிறப்புத் தளபதி லெப்டினன்ட் கேணல் தணிகைச்செல்வியின் 6 ஆம் ஆண்டு நினைவாகவும், சாள்ஸ்அன்ரனிப் பிரிவின் சிறப்புத் தளபதி கில்மன் நினைவாகவும் வன்னிப் பிரதேசத்தில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டி நிகழ்வில் தமிழீழத் தேசியக் கொடியை தளபதி வீரமணி ஏற்றி வைப்பதையும், பொதுச் சுடரை தளபதி வாகீசன் ஏற்றுவதையும், தலைமையுரையினை தளபதி அமிதாப் நிகழ்த்துவதையும் படங்களில் காணலாம்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

சிந்தனைக்கு

*மனநலம் மன் உயிர்க்கு ஆக்கம் இனநலம்*
*எல்லாப் புகழும் தரும்*

*திருக்குறள்*

# நமது நோக்கு

## அரசு எதிர்கொள்ளும் நெருக்கடிகளும் பொதுக்கட்டமைப்பின் எதிர்காலமும்!

சுனாமி அழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப்பணி உட்பட அதனால் சிதைவுண்ட பிரதேசங்களில் மீள்கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளவென உருவாக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படும் பொதுக்கட்டமைப்புதொடர்பான உடன்பாடு, அரசுக்கும் - புலிகளுக்குமிடையே கைச்சாத்தாகி வெறும் நான்கு நாட்கள் கடந்துள்ள நிலையில், அதன்செயற்பாடுகள் தொடர்பான ஏனைய நடவடிக்கைகள் எதுவும்இன்னமும் ஆரம்பிக்கப்படாத சூழலில், அது இயங்கத் தொடங்குமா, மாட்டாதா என்ற கேள்வி அனைத்துத்தரப்பு மக்களிடையேயும் பரவலாக எழ ஆரம்பித்துள்ளது.

சுனாமிக்குப்பின்னரான நிவாரண மற்றும் மீள்கட்டுமானப் பணிகளை முகாமைத்துவம் செய்வதற்கான இந்தப் பொதுக கட்டமைப்புக்கு எதிரானசக்திகள் அரசுக்குள்ளேயும், வெளியேயும் பல்வேறு காரணங்களால் அதற்கான உடன்பாடு கைச்சாத்தானதை அடுத்து கொதிப்பும், கோபமும் கொண்டுள்ள நிலையில் சட்டரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலமும், வேறுவகையிலான எதிர்ப்பு மற்றும் கண்டன நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்துவதன் மூலமும் ஒப்பந்தநிலையிலேயே அதனைச் செயற்படாது நசுக்கிவிட கங்கணம் கட்டிக்கொண்டு செயற்படத்தொடங்கியுள்ளன.

பொதுக்கட்டமைப்பிற்கு எதிராக அடிப்படை மனித உரிமை மீறல் மனுவொன்றை ஜே.வி.பியினர் நேற்றையதினம் நீதிமன்றில் தாக்கல் செய்யவிருந்தனர். அதாவது பொதுக்கட்டமைப்பினை உருவாக்கியதன் மூலம் இந்த நாட்டின் மக்களான ஒருசாராருக்கு அதாவது பெரும்பான்மையின சிங்கள மக்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக இந்தமனுவில் ஜே.வி.பி யினர் குறிப்பிட்டுள்ளார்களாம். கொழும்பு உயர் நீதிமன்றில் தாக்கல் செய்யப்படவிருந்த இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டால், பொதுக்கட்டமைப்பின் அடுத்த நடவடிக்கைகளுக்கான செயற்பாடுகளை முன்னெடுக்க இடைக்காலத்தடைகூட விதிக்கப்படலாம்.

இதேவேளை, பொதுக்கட்டமைப்பில் முஸ்லிம்களுக்கு உரிய கௌரவமளித்து, அவர்களுக்கு பிரதிநிதித்துவம் வழங்கப்படவில்லை என்று குற்றம் சாட்டியுள்ள "நுஆ" என்றழைக்கப்படும் தேசிய ஐக்கிய முன்னணியின் முக்கியஸ்தரான ஹிஸ்புல்லா தனது விமான நிலைய - விமான சேவைகள் திணைக்கள உயர் பதவியை உதறித்தள்ளிவிட்டு, பேரியல் அஸ்ரப்பும் ஏனையோரும் அரசிலிருந்து இராஜிநாமாச் செய்யவேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

அது மட்டுமல்லாது - ஆளும் ஐக்கியமக்கள் சுதந்திர முன்னணியின் மற்றொரு கூட்டுக்கட்சியான மக்கள் ஐக்கிய முன்னணி (M.E.P) தலைவரான அமைச்சர் தினேஷ் குணவர்த்தனா அரசிலிருந்து தமது கட்சியையும் விலக்கிக் கொள்வது குறித்து யோசித்துவருவதாக அறிவித்துள்ளார். பொதுக்கட்டமைப்பை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்தோர் மீது படையினர் கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வெடிக்க வைத்து, தடியடிப்பிரயோகம் செய்ததைத் தம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது என்று அவர் கூறியுள்ளார்.

இரண்டும்கெட்டான் நிலையில் சந்தர்ப்பவாதியாகி விட்டுள்ள பிரதமர் மகிந்த ராஜபக்ஷ - பொதுக்கட்டமைப்பு தொடர்பான விடயம் நாடாளுமன்றில் சமர்பிக்கப்பட்ட வேளையில் தலைமறைவாகிவிட்டு இப்போது அரசகூட்டணி உடைய, நோர்வே அரசுதான் காரணம் எனக்குற்றம் சாட்டியுள்ளதன்மூலம் பொதுக்கட்டமைப்பு உடன்பாட்டில் தனக்கு உடன்பாடு இல்லையென்பதை நாசூக்காக வெளிக்காட்டியுள்ளார்.

பொதுக்கட்டமைப்பை மட்டுமன்றி அனைத்து சமாதான முயற்சிகளையும் மூர்க்கத்தனமாக எதிர்த்து வந்துள்ள ஜே.வி.பி யினர் - இந்த உடன்பாட்டுக்கு எதிராக நாடளாவிய ரீதியில் பிரசார மற்றும் கண்டன நடவடிக்கைகளை தீவிரமாக மேற்கொள்ளப்போவதாக அறிவித்துள்ளனர்.

குழம்பிய குட்டையில் மீன்பிடிக்க நினைக்கும் ஐக்கிய தேசியக் கட்சியினரின் அரசியல் மூலோபாயம் விலாங்கு மீனின் தன்மை கொண்டதாகும். அரசையும், ஜனாதிபதியையும் பலவீனமாக்கி, தமது எதிர்கால அரசியல் இலாபங்களை எட்டும் இலக்குடன் செயற்படும் ஐ.தே.கட்சியினர் பொதுக் கட்டமைப்பை அவசியப்படுத்தி ஆரம்பத்தில் கத்திய போதும், இப்போது மிக நுட்பமாக அதனை அடக்கி வாசிக்கத்தொடங்கியுள்ளதுடன் அடுத்த தேர்தலை மையப்படுத்தி தமது அரசியல் வியூகங்களை மாற்றத் தொடங்கியுள்ளனர்.


இந்தச் சுற்றிவளைப்புச் சுழலில் பொதுக்கட்டமைப்பு எவ்வாறு இயங்கப்போகிறது என்ற கேள்விக்கான பதில் அடுத்துவரும் வாரங்களின் அரசியல் யதார்த்த நிலையை வைத்தே தீர்மானிக்கக்கூடியாதாக இருக்கும்.

பொதுக்கட்டமைப்பு செயற்பட ஆரம்பமாகும் முன்னரே ஆட்சிகலையவும் கூடும். அவ்வாறானதொரு நிலை ஏற்படும் பட்சத்தில் ஜனாதிபதியே நாடாளுமன்றைக்கலைத்து, பொதுத்தேர்தலுக்கான அறிவிப்பைக் கூறவும் நேரிடும். அது அவருக்கும், அவரது அரசியல் எதிர்காலத்துக்கும் தவிர்க்க முடியாத அவசியமுமாகும்.

இந்த நிலையில் பொதுக்கட்டமைப்பு உடன்பாட்டுக்கும், கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட ஏனைய உடன்பாடுகளுக்கும் ஒப்பந்தங்களுக்கும் ஏற்பட்ட நிலையே ஏற்படக்கூடும்.

இது அனுபவப் பட்டறிவின் கணிப்பீடேயாகும்.

## நாடும் நடப்பும்




## 'ஊர்சுற்றி'யார் பார்வையில்...

# இவர்களுக்கு ஒரு கவலை அவர்கள் கவலையோ வேறு

கடற்கோளினால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு மாகாணத் தமிழ் பேசும் மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்குவதற்கான பொதுக்கட்டமைப்புக்கு எதிர்ப்புக்கள் வெவ்வேறு இடங்களிலிருந்து வெவ்வேறு உருவங்களில் தலை நீட்டிக் கொண்டிருக்கின்றன. ஆனாலும் இந்த எதிர்ப்புக்கள் நின்று பிடிக்கக் கூடியவையாகத் தெரியவில்லை. பொதுக்கட்டமைப்பில் அரசும் புலிகளும் கைச்சாத்திட்டால் பெரிதாக எதிர்ப்புக் கிளம்புமென்ற பயமுறுத்தல்களெல்லாம் பிசுபிசுத்துப் போய்விட்டது. இனிவெளிநாட்டு உதவியை எப்படிப் பங்கு போட்டுப் பயன்பெறுவது என்ற யோசனைதான்! என்று நண்பர் பரமசிவம் சொன்னார்.

இருக்க இடமில்லாமல் கூடாரங்களிலும் கூரைகளின் கீழும் அவலப்பட்டுக் கொண்டிருக்கும் மக்களுக்கு புதிய இல்லங்கள் அமைத்து அவர்கள் தங்கள் தொழிலைச் செய்யவும் புனர்வாழ்வும் புனரமைப்பும் வழங்குவதற்குத்தான் பொதுக்கட்டமைப்பு அமைக்கப்பட்டிருக்கிறது. இனிஇதைச் செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவிருக்கின்றன. இந்த நிலையில் எங்களைப் புறக்கணித்துவிட்டார்கள் என்று கூச்சல் போட்டாலும் பாதிக்கப்பட்டமக்கள் தமக்கு உதவிகிடைப்பதைப் பற்றித்தானே கவலைப்படுவார்கள் என்றேன்.

இதுவும் சந்திரிகா அம்மையாருக்குத் தெரியும். இல்லையென்றால் அரசியல் கட்சிகளுக்குள்ளும் அமைப்புகளுக்குள்ளும் பிரிவினைகளையும் பிளவுகளையும் ஏற்படுத்துவதில் "சூரி" என்று அரசியல் வட்டாரங்களில் பேசப்பட்ட போதும் தன் காரியத்தைச் சாதித்து விடுவாரா? தனது கூட்டமைப்பே உடைந்த போதும் ஜே.வி.பியினரும் உறுமயக்காரர்களும். மிரட்டிய போதிலும் தனது காரியத்தில் அம்மையார் விட்டுக் கொடுக்காமல் கண்ணாகவே இருக்கிறார் என்றார் பரமசிவம்.

பொதுக்கட்டமைப்பை எதிர்த்தவர்களெல்லாம் இனி அடுத்த தேர்தலுக்கு ஆயத்தமாகத் தொடங்கிவிடுவார்கள். நாடாளுமன்றத்தேர்தலுக்குச் சிலர் ஆயத்தமாகிக் கொண்டிருக்கின்றனர். ரணில் விக்கிரமசிங்காவும் அவரது ஐக்கிய தேசியக் கட்சியும் ஜனாதிபதி தேர்தலுக்கு ஆயத்தமாகின்றனர். இந்த வருடம் நவம்பர் மாதமே ஜனாதிபதி தேர்தலை நடத்த வேண்டுமென்று ஐக்கிய தேசியக் கட்சி முன்போல வீதியிலிறங்கிப் போராடுவதற்கு ஏற்பாடு செய்து வருவதாகத் தெரிகிறதேயென்றேன்.

அப்படித்தான் ரணில் விக்கிரம சிங்காவும் மிரட்டி வருகிறார். அம்மையாரின் சுதந்திரக் கட்சியும் ஜனாதிபதி தேர்தலுக்கு வேட்பாளரைத் தெரிவுசெய்யவிருக்கிறது. மகிந்த ராஜபக்ஷதான் ஜனாதிபதி வேட்பாளர் என்று முன்னர் பெரிதாகப் பேசப்பட்டது. ஆனால் பொதுக்கட்டமைப்பு விவகாரத்திலும், ஜே.வி.பி உறவிலும் மகிந்தா நடந்துகொண்ட முறை அம்மையாரின் நம்பிக்கையை இழக்கச் செய்துவிட்டதாம். அம்மையாரின் தம்பி, பண்டாரநாயக்கா குடும்பத்தின் வாரிசு அநுரா பண்டாரநாயக்காதான் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் சுதந்திரக்கட்சியின் வேட்பாளராக நியமிக்கப்படுவார் என்று உறுதியாகப் பேசப்பட்டு வருகிறது. ஜே.வி.பியும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடக்கூடும் என்று பரமசிவம் சொன்னார்.

பொதுக்கட்டமைப்பில் முஸ்லிம்களுக்கு தனித்தரப்புத் தரவில்லையென்று ஆத்திரப்படும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம்கூட இன்னும் நான்கு மாதங்களில் பொதுத்தேர்தல் வரவிருப்பதாகத்தான் சொல்லிக்கொண்டிருக்கிறார் என்றேன்.

அவர்களுக்குத் தேர்தல் பற்றிய கவலை. தமிழ் மக்களுக்குத் தங்கள் சொந்த வீடுகளில், காணிகளில் எப்போது மீண்டும் போய்வாழ்வதற்கு வழிபிறக்கும், எப்போது தங்கள் காணிகளிலும், வீடுகளிலுமுள்ள படையினர் வெளியேறிச் செல்வார்கள் என்ற கவலை என்றார் பரமசிவம்.

ரவூப் ஹக்கீம் தேர்தல் பற்றிச் சொல்லிக்கொண்டிருக்கையில், பொதுக்கட்டமைப்பில் முஸ்லிம்கள் புறக்கணிக்கப்பட்டிருப்பதாகக் குற்றஞ்சாட்டி தேசிய ஐக்கிய முன்னணியின் பிரதித் தலைவர் எம்.எல்.ஏ. எம்.ஹிஸ்புல்லா தனது விமானநிலைய சிவில்போக்குவரத்துத் தலைவர் பதவியை ராஜினாமாச் செய்திருக்கிறார். இதுமட்டுமல்ல தேசிய முன்னணிக்கு 48 மணிநேரக் காலக்கெடுவும் விதித்திருக்கிறார். 48 மணிநேரத்துக்குள் பேரியல் அஷ்ரப்பும் மற்றவர்களும் பதவி விலகவேண்டுமென ஹிஸ்புல்லா கூறியிருந்தார். யாரும் பதவி விலகப் போவதாகத் தெரியவில்லை என்றேன்.

காலக்கெடு விதிப்பதற்கு இவருக்கு என்ன தகுதியிருக்கிறது என்று பிரதியமைச்சரும், முன்னணியின் செயலாளர்நாயகமுமான சேகு இஸ்ஸதீன் கேள்வி எழுப்பியிருக்கிறார். இப்பொழுது நு ஆ என்ற தேசிய முன்னணியும் உடைந்துவிடும் போலுள்ளது. எல்லாம் பதவிதான். கடற்கோளினால் பாதிக்கப்பட்ட மக்கள் புனர்வாழ்வை எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்கள் என்று பரமசிவம் சொல்லிக்கொண்டு நடந்தார்.

## வாசகர் நோக்கு...

### ஒளிராத மின்விளக்கு திருட்டுக்குத் துணை!

யாழ்ப்பாணம் கே.கே.எஸ் வீதியில் சிவலிங்கப் புளியடிச் சந்தியிலிருந்து ஓட்டுமடத்துக்குச் செல்லும் வீதியின் திருப்பத்தில் பொருத்தப்பட்டுள்ள மின் விளக்கு நீண்டகாலமாக ஒளிராத நிலையிலேயே உள்ளது.

இதனால் இந்த வீதியூடாகப் பயணிப்போர் பலத்த சிரமங்களை எதிர்நோக்கவேண்டியுள்ளது.

குடாநாட்டில் பகல் நேரங்களிலேயே வழிப்பறிக் கொள்ளைகள் அதிகரித்துள்ள இந்த நேரத்தில் மின்விளக்கு ஒளிராத இந்த இருட்டான இடத்தைத் திருடர்கள் எவ்வளவு சாதகமாகப் பயன்படுத்துவார்கள் என்பது சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு நாம் சொல்லித்தான் புரியவேண்டும் என்றில்லை.

குறிப்பிட்ட இடத்திலுள்ள மின்விளக்கு இரவு நேரத்தில் ஒளிர்வதில்லையென நாம் பலமுறை மின்சாரசபையினரிடம் முறைப்பாடு செய்தும் ஆக்கபூர்வமான எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

எனவே, இனியும் தாமதிக்காமல் யாழ்ப்பாணம் மின்சாரசபையினர் இதனைக் கவனத்தில் எடுக்க வேண்டுமென அந்த வீதியால் பயணிக்கும் மக்கள் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

தில்லையம்பலம்
ஓட்டுமடம் வீதி,
யாழ்ப்பாணம்.

கௌரி சுரேசன்

# ஆரம்பக் கல்வியில் தாய்மொழி கற்பித்தலின் புதிய பிரவேசங்கள்



மாந்தருக்காக மாந்தர் உருவாக்கிய அற்புதக் கருவி மொழி. அம்மொழி மாந்தரின் போக்குகளுடன் இணைந்தும், மாற்றங்களுக்கு ஈடுகொடுத்தும் தேவைகளுக்கு ஏற்ப தன்னைச் சரிப்படுத்திக்கொள்ளும் தன்மையுடையது.

இவ்வையகத்தின் மிகத் தொன்மை வாய்ந்த மொழிகளுள் ஒன்றாய்த் திகழ்வது அமிழ்தினுமினிய அருந்தமிழ் மொழி. சீரிளமைத்திறன் குன்றாது - எத்திக்கும் புகழ் மணக்க இலக்கிய வளமும், செழுமையும் பெற்றிலங்கும் உயர்தனிச் செம்மொழி தமிழ்.

மொழி, இலக்கியம், இலக்கணம் ஆகியவை ஒன்றையொன்று தழுவியும், ஒன்றுக்கொன்று துணைநின்றும் வளர்வன. அதே நேரத்தில் மொழி, இலக்கியம், இலக்கணம் ஆகியவற்றின் வரைமுறைகளைப் பெருமளவு அறிந்தும், மதித்தும் நடவாமல் ஒரு மொழியினர் தம் மொழிக்கு ஆக்கமளிக்கவியலாது. கடந்த சில ஆண்டுகளாக மொழியின் மாற்றங்களின் வேகம் ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வருகிறது.

தற்கால நடைமுறையில் தொடர்பு சாதனங்கள், பொழுதுபோக்கு கருவிகள், கணினி வாழ்க்கையில் ஊடுருவி மொழிப் பயன்பாட்டில் பெரிய மாற்றங்களைத் திணித்த வண்ணம் இருக்கின்றன. பயன்பாட்டுக்குத்தக்கவாறு வளைந்து கொடுக்க வேண்டிய இயல்பான நெருக்குதல் தமிழுக்கு ஏற்பட்டுள்ளது.

எனவே இன்றைய வாழ்க்கைச் சூழலில் தமிழ் கற்றலும், கற்பித்தலும், எழுதுதலும், எழுதுவித்தலும், புது வழிகளில் சென்றாக வேண்டும். அந்த வகை யில் நோக்கின் மொழியின் அடிப்படைத்திறன்கள் நான்காக வகுக்கப்பட்டுள்ளன.

1. செவிமடுத்தல் திறன்.
2. பேசுதல் திறன்.
3. வாசித்தல் திறன்.
4. எழுதுதல் திறன்.

பாடசாலை மாணவர்கள் 4 மொழித் திறன்களையும் தாய்மொழியறிவு மற்றும் இலக்கிய ரசனையையும் கற்று, அவற்றில் படிப்படியாக விருத்தியடைய வேண்டும். இதற்கு அடித்தளமிடுவது மொழித்திறன்களைக் கற்பதற்கேற்ற அணுகுமுறைகளைப் பயிலுதலும், பயிற்றுவித்தலுமாகும்.

அதுமட்டுமன்றி - ஆசிரியர்கள் கூடுதலான மொழி உணர்வு உள்ளவர்களாகவும், தமது மொழி இலக்கியம் பயன்பாடு பற்றிய ஆழ்ந்த அறிவும், விளக்கமும், அவர் [illegible] நயக்கும் பண்பும் உடை[illegible]வர்களாகவும் இருப்பின் அவர்கள் திறமைமிக்க தாய்மொழி ஆசிரியராகத் திகழ வாய்ப்பு ஏற்படும்.

## முன் பாடசாலைப் பருவம்

ஆரம்பப் பாடசாலையில் பிரவேசிக்கும் பிள்ளைகளின் முன் மொழி அனுபவங்களையும், ஆற்றல்களையும் முதலில் தரம் 1 இல் இனங்காணவேண்டும். அத்துடன் ஆரம்பப் பிரிவில் ஒவ்வொரு முதன்மை நிலையின் முடிவிலும் பிள்ளையின் மொழி ஆற்றலை மதிப்பீடு செய்யவேண்டும்.

1. பிள்ளையின் ஆரம்பகால மொழிப்பெறுகை சம்பந்தமாகவும், பிள்ளை அடைந்த மொழி விருத்தி தொடர்பாகவும் ஆசிரியர் முதலில் அறிந்து வைத்திருத்தல் வேண்டும்.

உதாரணம் -

(அ) விளையாட்டு

(ஆ) சமூக அறிமுகங்களும் இடைத்தாக்கங்களும் (சினேகபூர்வ உரையாடல்) - இருவர் இருவராக இணைதல். ஐவர் கொண்ட குழு. குழுவுடன் ஆசிரியர் இணைதல். இடைவினைச் சுற்றுலா. இவை போன்றவற்றினால் அறியமுடியும்.

நான்கு அடிப்படை மொழித் திறன்களும் ஒன்றோடு ஒன்று தொடர்புற்ற வகையில் விருத்தி செய்யப்படவேண்டும் என்பதைக் கட்டாயம் நடைமுறைப் படுத்த வேண்டும்.

பிள்ளைகளிடம் இந்த அடிப்படைத் திறன்கள் முன்னர் அவர்கள் பெற்றுக்கொண்ட அனுபவத்திலும் கற்றவற்றிலும் விருத்தி செய்யப்படலாமே தவிர, வயதின் அடிப்படையிலான விருத்திப் பருவத்தில் அல்ல என்பதும் தெளிவாக ஓர் ஆசிரியர் அறிந்து கொள்ளவேண்டும்.

**மிகத் தொன்மை வாய்ந்த மொழிகளுள் ஒன்றாய்த் திகழ்வது அமிழ்தினுமினிய அருந்தமிழ் மொழி. சீரிளமைத்திறன் குன்றாது - எத்திக்கும் புகழ் மணக்க இலக்கிய வளமும், செழுமையும் பெற்றிலங்கும் உயர்தனிச் செம்மொழி தமிழ்.**

## மொழித்திறன் விருத்திச் செயன்முறைகள்

I. செவிமடுத்தற் திறன்களை விருத்திசெய்தற்கான செயற்பாடுகள்.

* செவிமடுத்துச் செயற்படுதல்
* செவி மடுத்து வரைதல்
* செவிமடுத்து ஆக்குதல்
* உரையாடல்கள்
* வானொலி, தொலைக்காட்சி - சிறுவர் நிகழ்வுகள்
* செய்திகளும், அறிவுறுத்தல்களும்.
* குறிப்பெடுத்தல் (பந்தி தலைப்பிடல்)
* இயற்கை, செயற்கை - ஒலி விவரிப்பு
* கவிதை, பாட்டு, இசை
* கதை சொல்லல்

II. பேச்சுத்திறன்களை விருத்தி செய்வதற்கான செயற்பாடுகள்.

* உரையாடலில் ஈடுபடுதல்- குழு, தனி, சோடி.
* சொந்த அனுபவங்களை எடுத்துக் கூறல்.
* கவிதைகளையும், பாக்களையும் ஓதுதல்.
* படம் அல்லது செயலை - விவரித்தல்.
* சிறிய சொற்பொழிவை நிகழ்த்துதல்
* பாவனை செய்தல் - ஆசிரியர், வைத்தியர், தபாற்காரன்
* வாழ்த்துக்கள், மரியாதைப் பண்புகளைப் பயன்படுத்துதல்.
* விளையாட்டுக்கள்
* சிறிய நாடகங்கள்.

III. வாசிப்புத்திறனை விருத்தி செய்வதற்கான செயற்பாடுகள்.

* பார்வைப் பிரித்தறிகைத் திறன்களும், இடமிருந்து வலம் திசைமுகப்படுத்தலும் - (ஆசிரியர் கைந்நூல், மாணவர் செயல் நூல் பயன்படுத்துக)
* எழுத்துக்களின் ஒலி, வரி வடிவங்களைச் சொற்களில் இனங்காணல்.
* சொற் பொருளைத் தேடி அறிதல்.
* பந்தி அல்லது கதையை வாசித்தல்

உ+ம் :- சிறுவர் செய்திப் பத்திரிகைகள்

IV எழுத்துத் திறன்களை விருத்தி செய்வதற்கான செயற்பாடுகள்.

* கை - கண் இணைப்பு
* பென்சிலை எப்படிப் பிடிப்பது - கையாள்வது.
* முன் எழுதுதல் பயிற்சிகளும் எழுதுதல் கோலங்களும் (ஆசிரியர் கைந்நூல் , மாணவர் செயல் நூல்)
* நெறிப்படுத்தலுடனான கடிதம் எழுதுதல்
* சொல்லாக்கம் - 2,3 பல எழுத்துச் சொற்கள்
* சொற்கள் , வாக்கியங்கள் அமைத்தல்.
* ஆக்கி எழுதுதல்
* சட்டகங்கள் எழுதுதல்.

### ஆரம்பக் கல்வியில் தாய்மொழி கற்பிப்பதற்குரிய ஆசிரியரின் முன் நடவடிக்கைகள்

* தாய்மொழிக் கலைத்திட்டம், செயல் நூல், கைந்நூல் அதன் அமைப்பு, அணுகுமுறை, கல்விப் போக்கு என்பனவற்றை விளக்கிக்கொள்ளல்.
* பாடசாலைப் பிரவேசம் செய்யும் பிள்ளையின் முன் - மொழி அனுபவங்கள் , திறன்களை இனங்காணல்.
* கற்றல் - கற்பித்தலுக்காக பல்வேறு செயற்பாடுகளூடாக வகுப்பு மாணவர்களையும், சாதனங்களையும் முற்கூட்டியே ஒழுங்காக்குதல். (செயற்பாட்டு முறை - Activity method - யைப் பின்பற்றல்)
* பல்வேறு வகுப்பு மட்டங்களுக்கும் ஏற்ற - பாடநூல்கள் செயல் நூல்கள், ஆசிரியர் கைந்நூல்கள் என்பனவற்றைப் பயன்படுத்துதல்.
* மாணவர்கள், ஆசிரியர் இருவர் சார்பாகவும் மேலதிக வாசிப்பு நூல்களையும் பயிற்சிகளையும் தேடிப்பெறல்.
* மொழிக் கற்பித்தல் - கற்றலுக்கான வகுப்பறை ஒழுங்கமைப்பு, முகாமைத்துவத்தை தீர்மானித்தல்.
* கரும்பலகை - ஆசிரியரினதும், மாணவரினதும் பயன்பாட்டுக்கு உரியதாக இருத்தல்.
* மாணவர் - மையக் கற்றல் - இதற்கேற்ற முறையில் வகுப்பறையை ஒழுங்கமைத்தல்.
* வகுப்பை உள்ளும், புறத்திலும் - தனி, இரு, சிறு குழு செயற்படுவதற்குரிய விதமாக ஒழுங்குபடுத்தலும், முகாமைத்துவம் செய்தலும்.
* தனித்தனி மாணாக்கர்களை கணிப்பீடு செய்ய ஆயத்தம் செய்தல்.
* மொழி தொடர்பான பல்வேறு கற்பித்தல் நுட்பங்களைப் பயன்படுத்துதல்.
* தாய்மொழிப் பாடத்துக்கான தினசரி பாடக்குறிப்புப் பாடத்திட்டம் தயாரித்தல்.
* மாணவர்களின் மொழித் தேர்ச்சிகளைக் கணிப்பீடு செய்தல்.
* விழுமியங்களையும், சமாதான எண்ணக் கருத்துகளையும்- தமிழ் மொழிப் பாடத்துடன் ஒருங்கிணைத்து விருத்தி செய்யும் நடவடிக்கைகளையும் மேற்கொள்ளல் போன்றனவாகும்.
* மொழி கற்கும்போது உண்மை, நேர்மை, கரிசனை, பிறரை மதித்தல் போன்ற முன்மாதிரி காட்டலையும் விருத்தி செய்தல் வேண்டும்.
* நோம் சொம்ஸ்கி, புரூணர், விகொட்ஸ்கி ஆகிய மொழியியலாளர்கள் மொழி கற்றல் கோட்பாடுகளை ஆரம்பக்கல்வி வகுப்பறைகளில் புதிதாக பிரயோகிக்கும்போது, பிள்ளைகளின் மொழி கற்றல் விருத்தியடையும்.

## ஆய்வாளர்களும், அவர்கள் கொள்கைகளும்

பல மொழியியல் ஆய்வாளர்களும், உளவியலாளர்களும் பிள்ளைகள் எவ்வாறு பேசப்பழகுகிறார்கள் என்பதை விளக்கும் கொள்கைகளை உருவாக்கியுள்ளார்கள். அவற்றுள் முக்கியமான சில கொள்கைகள் தரப்படுகின்றன.

அவையாவன: -

### நோம் சொம்ஸ்கியின் கொள்கை:-

'பிள்ளைகள் மொழியறிவைத் தாமாகப் பெறுகின்றனரே தவிர, மற்றவர்கள் மொழியைப் பயன்படுத்துவதை நேரில் பார்த்து அதேபோல பின்பற்றுவதுமில்லை, அவர்களுக்குக் கற்பிக்கப்பட வேண்டியதுமில்லை'

* மொழியறிவைப் பெறுவதற்குத் தேவையான கருவி காரணங்களுடனேயே குழந்தைகள் பிறக்கின்றனர் (Language Acquisition Device) - LAD
* மொழியறிவைப் பெறுதலிலே குழந்தைகள் தாம் வாழும் சூழலினாலும், சுற்றியுள்ள மக்களாலும் தூண்டப்படுகிறார்கள்.
* உலகம் முழுவதிலும் ஏறத்தாழ ஒரே மாதிரியாகவே குழந்தைகள் மொழியறிவைப் பெறுகின்றனர்.

### ஜெரோம் புறூணரின் கொள்கை:-

**(JEROME BRUNER)**

குழந்தைகள் பிறந்து சில நாட்களிலேயே ஓர் ஒளிக்கற்றையைப் பின்தொடர்ந்து பார்க்க முடியும் என்றும், அதிலும் மிக முக்கியமாகத் தம் தாய்மாரின் பார்வையைப் பின் தொடர்ந்து பார்க்க முடியும் என்றும் கூறியுள்ளார்.

இதனை அவர் 'பங்கேற்கும் உத்தேசங்கள்' எனக் கூறுகிறார்.

* பிள்ளைகள் கற்பதில் ஆவலுள்ளவர்களாகவும், செயலூக்கம் உள்ளவர்களாகவும் இருப்பர் என்பதும், பரிசோதனை மூலமும், அனுபவம் மூலமும் அவர்கள் கற்கிறார்கள் என்பதும் இங்கு விளங்குகிறது.
* வயது வந்தவர்கள் வளரும் பிள்ளைகளுக்குரிய செயற்பாடுகளிலே துணைக்கட்டு (Scaffolding) அமைக்கிறார்கள். துணைக்கட்டு அமைப்பதன் மூலம் பிள்ளைகள் தாமாகவே காரியங்களைச் செய்யும் வரையில், ஒரு வயது வந்தவரோ, தேர்ச்சி மிகுந்த இன்னொரு குழந்தையோ பிள்ளைகளின் கற்றலுக்கு ஆதரவு வழங்குவதற்கு வாய்ப்பு உள்ளது.

### விகொற்ஸ்கியின் கொள்கை

**(VYGOTSKY)**

குழுவேலை செய்யும் போது பிள்ளைகள் அந்த வேலை தொடர்பாகத் தமக்குத் தாமே பேசிக் கொண்டிருந்தமையை அவதானித்தல், இதனையே 'தன்மைப் பேச்சு' (Egocentric talk) - தமக்குத்தாமே பேசிக் கொள்ளுதல் என அழைத்தார். சொற்கள் பிள்ளைகளினால் உள்மயமாக்கப்படுவதே 'சிந்தனை' என்றும் விகொற்ஸ்கி தன் கருத்துகளை எடுத்துக் கூறினார்.

அதன் மூலம் சிந்திப்பதற்கு மொழி மிகவும் அவசியம் என்பதையும் வலியுறுத்தினார்.

* ஒவ்வொரு பிள்ளையும் தனித்தனியாகச் செய்ய முடியாத வேலையை ஒன்றாகச் சேர்ந்து செய்து முடிக்கக் கூடியதாக இருப்பதே இதுவாகும்.

இவ்வாறு வேலை செய்வதை 'அண்மை விருத்திக்கான வலயத்தில் (Zone of Proximal Development) வேலை செய்தல் என அவர் குறிப்பிட்டார். பிள்ளைகள் ஏனையோருடன் சேர்ந்து இன்று செய்வதை நாளை தாமே தனியாகச் செய்வர் என்பதை இவர் வலியுறுத்தினார்.

* இந்தக் கொள்கைகளும் மொழி விருத்தியில் மிகவும் செல்வாக்குச் செலுத்துகிறது.

எனவே, மேலே கூறப்பட்ட கருத்துக்களையும், கொள்கைகளையும் மனதிலிருத்தி ஒவ்வொரு தனிமாணவனும் தனித்துவ மாணவர் தனித்துவ ஆற்றல்களை உடையவன், எனவே ஒரு பிள்ளையின் மொழியாற்றலைச் செய்மையாகக் கண்டறிவதற்குப் பரீட்சைகளும், கணிப்பீடுகளும் போதுமானவையல்ல.

பிள்ளைகள் வெவ்வேறு விகிதத்தில் மொழி விருத்தியைப் பெறுவர். ஒவ்வொரு மாணவனுக்கும் தமிழ் மொழி கற்பிக்கும் ஆசிரியரால் பாடசாலையிலே பொருத்தமான ஆதரவும், உற்சாகமும் வழங்கப்பட்டால் சகல பிள்ளைகளும் மொழித் திறன் விருத்தியில் உச்ச நிலையை அடையலாம் என்பதே கண்கூடு.

# படையினரை வெளியேறக்கோரி நடத்தப்பட்ட பேரணிகளிலிருந்து.....

## ஊர்காவற்றுறையில்.....


வெறிச்சோடிய வீதி




பேரணியில் அணி வகுக்கும் மாணவர்கள்


பேரணியில் ஒரு காட்சி


உதவி அரச அதிபர் பணிமனைக்கு முன்னால்...


டக்ளஸின் கொடும்பாவி...


கொடும்பாவி எரிக்கப்படுகிறது


எழுச்சிக் கோஷமிடும் மக்கள்


மகஜர் கையளிப்பு



நாடாளுமன்ற உறுப்பினர் சிவனேசன் உரை

## தென்மராட்சியில்...





பேரணியில் திரண்ட மக்கள் வெள்ளம்


பேரணியில் மாணவர்கள்


ஏ - 9 வீதியில் மறியற் போராட்டம்


தேவாலயத்தில் ஆராதனை




மகஜர் கையளிப்பு

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# யாழ். பல்கலைக்கழக ஊழியர்கள் இன்று வேலை நிறுத்தத்தில் குதிப்பு

யாழ்ப்பாணம்

யாழ். பல்கலைக்கழக ஊழியர்கள் இன்று முதல் தொடர்ச்சியான வேலை நிறுத்தத்தில் ஈடுபடவுள்ளதாக ஊழியர் தொழிற்சங்கம் அறிவித்துள்ளது.

ஊழியர்களின் சம்பள முரண்பாடு குறித்து பல்கலைக்கழகங்களின் மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர், கல்வி அமைச்சர், பல்கலைக்கழக துணைவேந்தர் ஆகியோரிடம் தெரிவித்தும் இதுவரை உரிய தீர்வு வழங்கப்படாததையடுத்து தாம் தொடர்ச்சியான வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவதற்கு பல்கலைக்கழக தொழிற்சங்கங்களின் கூட்டுக்குழு தீர்மானித்திருப்பதாக ஊழியர் சங்கம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் பாதுகாப்பு மற்றும் நீர் விநியோகம் ஆகியவற்றிலுள்ள அங்கத்தவர்கள், முதல் கட்டத்தில் வேலை நிறுத்தத்தில் இருந்து நீக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஊழியர் சங்கத்தின் அனைத்து அங்கத்தவர்களும் இன்று காலை 9 மணிக்கு இராமநாதன் மண்டபத்திற்கு முன்பாக ஒன்று கூடுமாறும், ஊழியர் சங்கத்தினால் பேணப்படும் வரவுப் பதி வேட்டில் கையொப்பமிட்டு வரவினை உறுதி செய்யுமாறு ஊழியர் சங்கம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை- கடந்த வியாழனன்று ஆரம்பிக்கப்படவிருந்த இந்தப் போராட்டம் நாட்டின் அரசியல் குழப்பம் காரணமாக தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

# லொறி மோதியதால் மாணவி பரிதாப மரணம்!

## வவுனியா - குருமன்காட்டில் சம்பவம்

வவுனியா

வவுனியா – குருமன்காட்டில் லொறி மோதி சைக்கிளில் சென்ற மாணவி ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

நேற்று முற்பகல் 11 மணியளவில் குருமன்காடு – கோவில் வீதியில் இடம் பெற்ற இந்தச் சம்பவத்தில் வவுனியா– திருநாவற்குளத்தைச் சேர்ந்த வி. ஜெனனி (வயது11) என்ற மாணவியே உயிரிழந்தவராவார்.

கோவில் வீதியில் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தவேளை – காளி கோவிலுக்கும் பிள்ளையார் கோவிலுக்கும் இடையில் எதிரே வந்த லொறி மோதியதில் மேற்படி மாணவி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

மாணவியின் சடலம் பொலிஸாரால் மீட்கப்பட்டு, வவுனியா வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டு, நேற்று மாலை விசாரணைகளின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

மாணவியை மோதிய லொறியின் சாரதி, வவுனியா பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வருகிறார். (03)

# மடு சோதனைச்சாவடி திறக்கும் நேரம் நீடிப்பு!

மடுமாதா ஆடித்திருவிழாவை முன்னிட்டு எதிர்வரும் முதலாம் திகதி முதல் 03 நாட்கள் மடு வீதிச் சந்தி சோதனைச்சாவடி இரவு 10 மணிவரை பக்தர்கள் பயணம் செய்வதற்காக திறந்திருக்கும் என படையினர் அறிவித்துள்ளனர்.

மடுமாதா ஆலய ஆடித்திருவிழா ஏற்பாடுகள் குறித்து மன்னார் செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின்போது படையதிகாரிகளால் இந்த அனுமதி வழங்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி – அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் மூன்று நாட்கள் இரவு 10 மணிவரை மடுச்சந்தி இராணுவ சோதனைச்சாவடி ஊடாக பொதுமக்கள் பயணம் செய்யமுடியுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (201)

## திருகோணமலை...

படைத் தளபதியும், கடற்படைத் தள பதியுமான வைஸ் அட்மிரல் தயா சந்தகிரிக்கு ஜனாதிபதி சந்திரிகா உத்தரவிட்டார்.

எனினும், அண்மையில் திருமலையில் வைக்கப்பட்ட புத்தர்சிலையால் ஏற்பட்ட வன்செயல்களுக்கும் தனக்கும் தொடர்புண்டென புலனாய்வுத் தகவல்கள் தெரிவித்ததை றியர் அட்மிரல் வீரசேகர முற்றாக மறுத்துள்ளார்.

இதேவேளை – கிழக்கு கடற்படைத் தளபதி யான றியர் அட்மிரல் வீரசேகரவை மேற்கு கடற் படைத் தளபதியாகவும் மேற்கு கடற்படைத் தள பதியாகவுள்ள றியர் அட்மிரல் சரத் ரட்ணகீர்த்தியை கிழக்குக் கடற்படைத் தளபதியாகவும் மாற்றுவதற்கு கடற்படைத் தளபதி தயா சந்தகிரி தீர்மானித்திருந்தார்.

ஆனால், இந்தத் திட்டத்தை ஜனாதிபதி மாற்றியமைத்து கடற்படைத் தலைமையகத்தில் பிரதித் தலைமை அதிகாரி என்ற புதிய பொறுப்பொன்றை உருவாக்கி அந்த இடத்துக்கு றியர் அட்மிரல் சரத் வீரசேகரவை நியமித்துள்ளார். றியர் அட்மிரல் ரத்னகீர்த்தி அவரது பழைய இடத்திலேயே உள்ளார்.

கடற்படைக்கென முதன்முதலாக இந்தப் பதவி உருவாக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே இது போன்ற பதவி இராணுவத்தில் உள்ளது.

கடற்படையில் சேவையின் அடிப்படையில் றியர் அட்மிரல் சரத் வீரசேகர ஐந்தாவது இடத்திலுள்ளார். றியர் அட்மிரல் மோகன் விஜய விக்கிரம இரண்டாம் இடத்திலும், றியர் அட்மிரல் வசந்த கரன்னகொட மூன்றாவது இடத்திலும், றியர் அட்மிரல் ரட்ணகீர்த்தி நான்காவது இடத்திலும் உள்ளனர்.

றியர் அட்மிரல் வீரசேகர கடந்த பெப்ரவரி இரண்டாம் திகதி கிழக்கு மாகாண கடற்படைத் தளபதியாகப் பொறுப்பேற்றார். இதற்கு முன்னர் அவர் கடற்படைத் தலைமையகத்தில் கடற்படை நடவடிக்கை இயக்குநராக இருந்தாரென்பது குறிப்பிடத்தக்கது.

## தீவகம் - ஆயிரக்....

'ஒற்றுமையைப் பேணுவோம், எமது தேசியத்தை மீட்போம்', 'இராணுவமே எமது வீட்டுக்கு நாம் வர உனது வீட்டுக்குப் போ', 'சந்திரிகா அம்மையாரே போர் வெறியை நிறுத்து', 'எம் பொறுமையைச் சோதிக்காதே', 'எமது வீடு எமக்கு இல்லையா?', 'ஆக்கிரமிப்புப் படைகளே எமது நிலத்தை விட்டு உடனே வெறியேறு', 'புரிந்துணர்வு உடன்பாட்டை நடைமுறைப்படுத்து', 'தமிழ் மண்ணின் ஆக்கிரமிப்பு பொடிபட பொங்கி எழுவோம்' போன்ற கோஷங்களை எழுப்பியவாறு, பதாகைகளையும் ஏந்தியிருந்தனர்.

பேரணி ஆரம்பமான இடத்திலிருந்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கொடும்பாவி– ஒப்பாரியுடன் [illegible]த்துவரப்பட்டு, ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு முன்பாக தீயிட்டு எரிக்கப்பட்டது. பேரணி ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனையை வந்து சேர்ந்ததும், அங்கு கண்டனக் கூட்டம் இடம்பெற்றது.

இந்தக் கண்டனக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவனேசன், பத்மினி சிதம்பரநாதன், தீவக மக்கள் அபிவிருத்தி நலன் காப்பக மூத்த உறுப்பினர் முத்துகிருஷ்ண பிள்ளை ஆகியோர் உரையாற்றினர்.

ஐரோப்பிய ஒன்றியத்திற்கான மகஜரை தீவகப் பொது அமைப்புகள் ஒன்றியத்தின் சார்பாக கனகலிங்கமும், தீவக மக்கள் அபிவிருத்தி நலன் காப்பக செயலாளர் ஜீவசீலனும், ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் சிறிமோகனிடம் கையளித்தனர்.

தமிழீழத் தேசியத் தலைவருக்கான மகஜரை தீவக மக்கள் அபிவிருத்தி நலன் காப்பகம், தீவக பொது அமைப்புக்கள் ஒன்றியம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் இணைந்து நாடாளுமன்ற உறுப்பினர் சிவனேசனிடம் கையளித்தனர்.

இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் ஆயிரக்கணக்கான மக்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் பங்குபற்றினர்.

இந்த ஆர்ப்பாட்டப் பேரணியை முன்னிட்டு பெருமளவிலான கலகம் அடக்கும் பொலிஸார் தீவகத்தில் குவிக்கப்பட்டிருந்தனர். பேரணி சென்ற பாதையில் அமைந்திருந்த ஈ.பி.டி.பி. அலுவலகப் பகுதியில் அதிகளவிலான பொலிஸார் குவிக்கப்பட்டிருந்ததுடன், கைகளில் பொல்லுகளுடன் காணப்பட்டனர்.

எனினும், இந்தப் பேரணி மிகவும் அமைதி பூர்வமாக இடம்பெற்றது.

College of Computer Studies
புதிய பிரிவுகள் ஆரம்பம்
அனைத்து கணனிக் கற்கை நெறிகளுக்கும்
Special Offer 80%
Batch I : 29.06.2005
Batch II : 01.07.2005
Batch III : 03.07.2005
Time : 10 a.m & 03 p.m
தொடர்புகளுக்கு:-
119, Pointpedro Road,
Nallur, Jaffna.
0777-279034

## பொதுக்கட்டமைப்பு...

கைச்சாத்திட்டிருப்பதானது அரசியலமைப்பிற்கு முரணானது.

இந்த உடன்படிக்கையால் சுனாமியால் பாதிக்கப்பட்ட மாத் தறை, காலி, அம்பாந்தோட்டை, களுத்துறை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மக்களுக்கு எவ்வித நியாயமும் கிட்டப்போவதில்லை. விடுதலைப் புலிகளுக்கு வழங்கப்படும் நிதியை அவர்கள் எவ்வாறு கையாள்கிறார்கள் என்பதை அறிந்து கொள்ள மார்க்கம் எதுவும் இல்லாதிருப்பது மிகவும் பயங்கரமானது. நிதி ஒழுங்கு விதிகளுக்கு முரணானதுடன், இந்தச் சபை நாடாளுமன்றத்திற்கு பதில் கூறக்கடமைப்படாத ஒன்றென்பதால் அது நாட்டின் இறைமைக்கு அச்சுறுத்தலாக அமையும்.

அதனால் இந்த உடன்படிக்கை சட்டவிரோதமானது என அறிவிக்குமாறும், இதனை செயற்படுத்துவதை தவிர்க்கும் வகையில் இடைக்காலத் தடையுத்தரவொன்றை விதிக்குமாறும் மனுதாரர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த வழக்கு எதிர்வரும் வியாழக்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

## தென்மராட்சி...

தொடர்ந்து ஆலய முன்றலில் இருந்து பேரணி ஆரம்பமாகியது. பேரணியாகச் சென்ற மக்கள் – உசன் இராணுவ முகாம் சிவில் அதிகாரி மேஜர் விஜேரத்னவிடம் உயர் பாதுகாப்பு வலயப் பகுதிகளுக்குள் முடக்கப்பட்டுள்ள தமது வாழ்விடங்களுக்குச் செல்ல அனுமதிக்கப்படவேண்டும் என வலியுறுத்தி மகஜர் ஒன்றைக் கையளித்தனர்.

இந்த மகஜரை தென்மராட்சி கிழக்கு இடம் பெயர்ந்தோர் நலன் புரிச் சங்கத்தைச் சேர்ந்த ஓய்வுபெற்ற அதிபர் துரைரட்ணம் கையளித்தார்.

தொடர்ந்து – கண்டி வீதியூடாக பேரணி மிருசுவில் நோக்கி நகர்ந்தது.

எமது நிலம் எமக்கு வேண்டும், எமது நிலங் களில் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளில் ஈடுபட அனுமதிக்க வேண்டும் போன்ற கோஷங்களை எழுபியவாறு சென்றதுடன் பதாகைகளையும் தாங்கியிருந்தனர்.

ஏ-9 வீதியூடாக நகர்ந்த பேரணி – மிருசுவில் தேவாலயத்தைச் சென்றடைந்ததை அடுத்து ஒரு மணிநேரம் வீதிமறிப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.

SPOKEN ENGLISH WITH GRAMMAR
Lectures By:
Mr. M.A.HARI
புதிய பிரிவுகள் ஆரம்பம்
30.06.2005 வியாழன்
மாலை 4.00 மணி
Tuesday
Thursday
4.00 pm - 5.00 pm
HARI'S INSTITUTE
இல 564, கஸ்தூரியார் வீதி,
(யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை அருகில்)
யாழ்ப்பாணம்
(C-4228)

# காணாமற்போன ஊர்காவலர் சடலமாக மீட்கப்பட்டார்!

ஒருவாரத்திற்குமுன்னர் திருமலை சேருநுவர காட்டுப்பகுதியில் விறகு வெட்டிக் கொண்டிருந்த வேளை இனந் தெரியாதவர்களால் கடத்தப்பட்ட ஊர்காவற்படையைச் சேர்ந்த ஒருவர் நேற்று சடலமாக மீட்கப்பட்டதாக படைத் தலைமையகம் தெரிவித்துள் ளது.

சடலமாக மீட்கப்பட்டவர் கவன் திஸ்ஸபுர சேருவிலவைச் சேர்ந்த சகான்நந்தசிறி (வயது24) என்பவராவார்.

நேற்றுக் காலை பொதுமக்கள் சிலர் இந்தக் காட்டுப் பகுதிக்குள் சென்ற வேளை சடலமொன்று கிடப்பதைக் கண்டு படையினருக்குத் தெரிவித்ததை அடுத்து அங்கு சென்ற படையினர் சடலத்தை மீட்டனர்.

மீட்கப்பட்ட சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக மூதூர் வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சேருநுவர பொலிஸார் இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## செங்கலடி துப்பாக்கிச் சூட்டில்

# காயமுற்ற கோப்ரல் கொழும்பில் மரணம்!

மட்டக்களப்பு – செங்கலடியில் கடந்த 9 ஆம் திகதி ஈ.பி.டி.பி உறுப்பினர்கள் மீது இனந் தெரியாதவர்கள் நடத்திய தாக்குதலின் போது காயமடைந்த இராணுவ கோப்ரல் பிரேம திலக (வயது-37) சிகிச்சை பலனளிக்காத நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் கடந்த சனிக்கிழமை இரவு மரணமடைந்தார்.

ஈ.பி.டி.பி உறுப்பினர்களுக்கு பாதுகாப்பு வழங்கிக்கொண்டிருந்த வேளையே இவர் இனந்தெரியாதவர்களின் தாக்குதலுக்கு இலக்கானார். இவர் மட்டக்களப்பு வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக விமானம் மூலம் கொழும்பு வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தபோதே உயிரிழந்தார்.

## அரச உயர்மட்ட...

நிரந்தர வீடுகளை அமைப்பதற்கான இடங்களைப் பார்வையிட்டனர்.

இவர்களின் வருகையையொட்டி வடமராட்சிப் பிரதேசத்தின் இராணுவப் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (14)

# குருநகரில் மீனவர் கைது!

யாழ்ப்பாணம்

குருநகர் துறைமுகப் பகுதியில் அனுமதியின்றி மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்த ஒருவர் கடந்த சனிக்கிழமை கைது செய்யப்பட்டதாகப் படைத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்டவர் மேலதிக விசாரணைகளுக்காக குருநகர் பொலிஸாரிடம் படையினரால் ஒப்படைக்கப்பட்டார்.

## வெலிக்கந்த தாக்குதல்...

போராளிகளின் பயணம் இடை நிறுத்தப்பட்ட பின்னர் இராணுவத்தினர் மற்றும் கண்காணிப்புக் குழுவினரது வாகனப் பாதுகாப்பைவிட மேலதிகமாக குறிப்பிட்ட தொகை இராணுவத்தினர் எமது உறுப்பினர்கள் பயணம் செய்யும் வாகனத்திலும் இருப்பார்கள் என்ற உடன்பாட்டிற்கு இருதரப்பினரும் வந்ததை நீங்கள் அறிவீர்கள்.

எமது போராளிகளின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் வகையில், ஏன் இராணுவத்தினர் எமது போராளிகள் பயணம் செய்த வாகனத்தில் இருக்கவில்லை என்பது எமக்கு தெரியவில்லை. சம்பவம் இடம் பெற்ற இடத்திற்கு இரு புறத்திலும் இருந்த காவல் நிலைகளில் இராணுவத்தினர் கடமையில் நின்ற போதும், சம்பவம் இடம்பெற்ற பின்னர் அவர்கள் பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது.

இந்தப் போக்குவரத்து நடவடிக்கை தொடர்பாகவும், தொடரணி எத்தனை மணிக்கு தாக்குதல் நடந்த இடத்திற்கு வரும் மற்றும் பயணிக்கும் வாகனத்தின் வகை என்பன தொடர்பான தகவல்கள் அனைத்தும் இராணுவத்திற்கு மட்டுமே தெரிந்திருந்தன.

விடுதலைப் புலிகளின் போக்குவரத்துத் தொடர்பாக ஏற்கனவே தமக்கு அறிவிக்கப்பட்டு, அதற்கமைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தால் இந்தக் கொலைகள் தவிர்க்கப்பட்டிருக்குமென மட்டு.–அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் உட்பட்ட போராளிகள் கொலைசெய்யப்பட்ட போது இராணுவப் பேச்சாளர் தயாரத்னநாயக்க கூறியிருந்தமை இங்கு கூறிப்பிடத்தக்கது.

இதனடிப்படையில் விசாரனைகளை மேற்கொண்டு தற்போது நடத்தப்பட்ட தாக்குதலின் உண்மை நிலையினை எமக்கு வெளிப்படுத்த வேண்டுமென நாம் கண்காணிப்புக் குழுவினரிடம் கேட்டுக் கொள்கிறோம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

## மரண அறிவித்தல்

### திருமதி செல்வராஜா பத்மாவதி

வல்லை வீதி, சங்கானையைச் சேர்ந்த திருமதி செல்வராஜா பத்மாவதி 27.06.2005 திங்கட்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
ந.செல்வராஜா (கணவர்)
பிள்ளைகள்.

T.P.: 0112540301

(இ)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 28.06.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.